




921
மயி 2
SLIPR

# மயில்வாகனம்

உ

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே



திருவளர் புங்குடுதீவில்
உயர் சைவ வேளாண் குலதிலகம்

**திரு. கந்தையா வள்ளியம்மை தம்பதிகளின்**
**தவப்புதல்வன்**

# திரு. நா.க. மயில்வாகனம்

**அவர்களின் நினைவு மலர்**


**08 . 04 . 1995**

உ

திருச்சிற்றம்பலம்

கொழும்பு
பிரபல வர்த்தகரும் வள்ளலுமாகிய
உயர்திரு என். கே. மயில்வாகனம் அவர்கள்
அமரராகியமை குறித்த
நினைவு மலர்

தோற்றம் 11. 7. 1929 மறைவு 19.3.1995



## திதி வெண்பா

ஆண்டு பவமே அதில் வரும் பங்குனி
மாண்ட அபரத் திருதியையே - நீண்டபுகழ்
பெற்ற மயில்வா கனனார் சிவன்பாதம்
உற்ற தினமென் றுணர்

உ

சிவமயம்



மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்த

## இறைபணிச்செம்மல்

எங்கள் அப்பா

# திரு. நா. க. மயில்வாகனம்

அவர்களின்

பாத கமலங்களுக்கு

**சமர்ப்பணம்**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உ

சிவமயம்

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்

குருமஹா சந்நிதானம் - ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்**

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி : 24018

22. 3. 95
நல்லூர், யாழ்ப்பாணம்
இலங்கை.

*அருளோங்கும் மெய்யன்பர்களே,*

அமரர் N.K. மயில்வாகனம் அவர்கள் சிவபதம் எய்திய செய்தி அறிந்து மனத்தாக்க முற்றோம். அவர் ஒரு கொடைவள்ளல் எனத்தகும், தருமசீலர், சைவப் பெரியார். தீவினைவிட்டு ஈட்டல் பொருள் என்பதை உளத்திருத்தி வர்த்தகம் செய்தவர். தேவாலய கைங்கரியங்களில் பெருமளவு ஈடுபாடு கொண்டு தொண்டுகள் ஆற்றியவர். யாழ் குடாநாட்டிலும் கொழும்பு மாநகரிலும் அவரை அறியாதவர் இலர் எனலாம். எவரையும் இன்முகம் காட்டி உபசரிக்கும் பெருங்குணமும், ஆடம்பரமில்லா வாழ்க்கையையும் கைக்கொண்ட பெரியார். அவரின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறி அவரின் ஜீவாத்மா நிர்திசய நித்தியானந்த சாந்தி நிலை எய்த வேண்டுமெனப் பரம்பொருளின் திருவருளை உளமார வேண்டி நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.

*ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி*

*ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்*

உ
சிவமயம்

# மயில்வாகனனின் மாண்பு

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று" என்ற வான்புகழ் வள்ளுவரின் வாக்குக் கிணங்க வையகத்தில் புகழோடு தோன்றி வாழ்வாங்கு வாழ்ந்து தன்னலமற்ற சேவைகள் புரிந்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் அமரர் நாகனாதர் கந்தையா மயில்வாகனம் அவர்கள்.

"வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்" என்னும் பழமொழியில் அமிழ்ந்து கிடக்கும் அற்புதங்கள் அளக்க முடியாதவை. இத்தகைய புங்குடுதீவு வேளாண் மரபில் பிறந்தவரே திரு. நா.க. மயில்வாகனம் அவர்கள். இவர் இளமைக் காலம் தொடக்கம் மாதா. பிதா. குரு தெய்வம் என்னும் நான்கு நிலைகளையும் நெஞ்சில் நிறுத்தியவர். வழிபாடு இவர் வழக்கங்களில் ஒன்று. புங்குடுதீவில் அமைந்துள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற கண்ணகை அம்மன் இவர் குலதெய்வம். இருப்பிட்டி சித்திவிநாயகர் ஆலயம் இவருடைய இதயதெய்வம். இவ்வாலயம் இவரின் இல்லத்தரசியின் பிறப்பிட மாகவுள்ள இருப்பிட்டியில் அமைந்துள்ளது.

இது யாவற்றிற்கும் மேலாக இவர் தொழில்புரிந்த இடமான கொழும்பு மாநகரிலும் உள்ள ஆலயங்களுக்கும் தம்மாலானவற்றைச் செய்யவும் செய்விக்கவும் தவறவில்லை. சிறப்பாக கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கதிரேசன் ஆலய அமைப்பின் திருப்பணி வேலைகள் இனிது நிறைவேறவும் அவ்வாலயத்திற்கு ஒரு மண்டபம் நிறுவவும் கும்பாபிஷேகம் நடைபெறவும் ஆலயத்தில் நடைபெறும் நித்திய நைமித்தியங்கள். விசேட பூஜைகள் மகோற்சவங்கள்ஆண்டுத் திருவிழாக்கள் இனிது நெறிமுறை தவறாது நடைபெறுவதற்கும் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் யாவற்றிற்கும் நம் நாட்டுத் தலைவர்கள் பலரின் பங்களிப்போடு இவரின் பங்களிப்பும் போற்றுதற்குரியது.

இன்னும் புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவர்களுக்குக் குடி தண்ணீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்காக ஒரு குழாய் நீர்த்திட்டத்தை வகுத்து அதை தன்னுடைய சொந்த செலவிலேயே செயல்முறைப்படுத்திய பெருமையும் இவருக்கே உண்டு.

"தென்புலத்தார். தெய்வம். விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கு வாழ்விலக்கியமாகி நன்மக்கட் பேறுகளைப் பெற்றுப் பூரித்த வாழ்வு வாழ்ந்தார்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அன்பான மனைவி ஆருயிர் சகோதரிகள் அருமைக் குழந்தைகள். இனிய மருக்கள் பேரன்புமிக்க பேரப்பிள்ளை கள் எண்ணற்ற உற்றார் உறவினர் நண்பர்கள். அனைவர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனே.

**கதிரவேலுப்பிள்ளை. சட்டத்தரணி,**
J.P.U.M.



உ
சிவமயம்

# நந்தா விளக்கென வாழ்ந்த பெருமகன்

***"ஈதல் இசைபட வாழ்தல்; அது அல்லது***
***ஊதியம் இல்லை உயிர்க்கு"***

ஆஜானுபாகுவான தோற்றம் கம்பீரமான நடை, செந்தண்மையான முகம், சரியெனப் பட்டதை ஒளிவின்றிப் பேசும் சொல்லாட்சி, நல்லதைத் தயங்காது செய்யும் தகைமை. அற்றார்க்கும் உற்றார்க்கும் அலர்தார்க்கும் அள்ளிக் கொடுத்து அனைக்கும் கை, முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அன்பு மனம் நிறைந்தவர்தான் N. k. M. அவர்கள். இவருடன் 40 வருடத்திற்கு மேல் தொடர்புண்டு. புங்குடுதீவை பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பில் வாழ்ந்தவர். நெடுங்கால வாழ்க்கை அநுபவமாக, கூடி வாழும் விருப்பமாக மனிதாபிமானம் உண்மையை விரும்புதல், நியாய உணர்ச்சி இவற்றை மதித்து எண் ணம், சொல், செயல் மூன்றிலும் அப்பழுக்கற்றவராக வாழ்ந்தவர். "உள்ளத்தணையது உயர்வு" என்ற சொல்லின் இலக்கணமானவர்.

புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னின்று செய்த புண்ணியசீலன். கொழும்பு (செக்கடித்தெரு, கதிரேசன் வீதி, கதிரேசன் கோவில் கும்பாபிஷேகத்தைச் செய்வித்த தர்மசீலர். இராமேஸ்வரம் முதல் காசிவரை சென்று ஷேத்திராடனம், தீர்த்தயாத்திரை செய்து புண்ணியத்தைத் தேடியவர். இலங்கையில் திருக்கேதீஸ்வரம், நயினாதீவு போன்ற பல தலங்களுக்கு நற்பணிகள் பல மனமுவந்து செய்தவர். "ஒன்று கிடைத்தால் பாதி தான தர்மத்திற்கென்று சொல்லுவார். அவ்வாறு உடன் செய்வார். தாழாத கீர்த்தி மாறாத வார்த்தை, தவறாத சந்தானம் அன்பு அகலாத மனைவி இத்தனை பேறையும் பெற்றவர் இவர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்னும் குறள் இவரது வாழ்க்கையின் உண்மை யாகும். கடமையில் கவனம் மிக்கவர். சோம்பல் சிறிதும் இல்லாதவர். எடுத்த கருமத்தை நிறைவாகச் செய்யும் தன்மையுடையவர். நேற்று இருந்தார். இன்று இல்லை. இது உலக நியதி. மறக்க முடியவில்லை. இறப்பிலும் ஒரு உயர்வு. காலைக்கடன் முடித்தார். பலருடன் பேசி மகிழ்ந்தார். அன்பு மனைவியின் கரத்தால் பால் வாங்கிப் பருகினார். சற்று ஓய்வு எடுக்கச் சாய்ந்தார். பேருறக்கம் எய்துவிட்டார். மனக்கண்ணிலிருந்து நீங்கவில்லை. புகழுடம்பு எய்து விட்டார். வானளாவிய கோபுரங்கள், பளிங்கு மண்ட பங்கள் மூர்த்திகளின் ஆபரணங்கள், கலாசாலை யாவும் புகழ்பரப்பிக் கொண்டிருக் கின்றது. அழியாச் சிவதர்மங்கள், இறைபணித் தொண்டுகள் பிறப்பிலாப் பெருவாழ்வை அளிக்கும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக கலியுக வரத ஸ்ரீகதிர்வேலாயுதப் பெருமான் திருவடி களை அனைவரும் பிரார்த்திப்போமாக. துயருறும் மனைவி மக்கள் மருமக்கள் அனைவரும் அவர்வழி நல்லன செய்து தேறுவீர்களாக.

*"அடப்பக்கொண்டார் அடிசிலும் உண்டார்*
*மடக்கொடியளோடு மந்தணமும் பேசிக்கொண்டார்*
*இடப்பக்கமே இறைநொந்த தென்றார்*
*கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே"*

பிரதிஷ்டா பூஷணம் சிவாகமஞானபானு
பிரதிஷ்டா கலாநிதி
சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்
ஆதீன குரு ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் தேவஸ்தானம்-நயினை

# இறைபணிச் செல்வர் மயில்வாகனம்

பூர்வ பிறப்பு புண்ணியத்தினாலே தன் வாழ்வின் பெரும் பகுதியினைக் கோயில்களிலேயே கழித்த புகழுக்குரியவர் திரு. நா. க. மயில்வாகனம் அவர்கள். முன் செய்த தவத்தால் மூன்று கும்பாபிஷேக காலங்களைக் கதிர் வேலாயுத சுவாமி கோயிலிலேயே கண்டு கடந்தவர். முப்பது ஆண்டுகளாக இக்கோயில் பொருளாளராக இருக்கும் பேறு பெற்றிருந்தார். திருப்பணிக் காலங்களில் பெருநிதி திரட்டவும் பெரும் திருப்பணிகளை ஊக்குவிக்கவும் சலியாத மனங்கொண்டு உழைத்தவர்.

இருக்கும்போதே இறைபணிச் செல்வர் என்று இந்து சமய இராஜாங்க அமைச்சரால் அலங்கரிக்கப்பட்டவர். எத்தனையோ திருவிழாக்களை முன் னின்று நடத்தியவரின் இறுதிவிழாவில் கலந்து கொள்ள நேர்ந்தது என்னே!, என்னே!!. மனங்களை விட்டு மறையும் நினைவுகளோ.

*"நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே*
*அல்லாது வேறுநிலையுளதோ அகமும் பொருளும்*
*இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்*
*எல்லாம் வெளி மயக்கே இறைவா கச்சி ஏகம்பனே"*

சிவநெறிச் செம்மல்
தி. செந்தில்வேள் ஜே.பி.
பிரதம அறங்காவலர்
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில்.



# வரலாற்று நாயகன்

ஒரு சிறந்த நாட்டில் இருக்க வேண்டியவை மூன்று.
ஒன்று; தள்ளா வினையுள் எனப்படும் இயற்கைவளம்.

இரண்டு, தக்கார் எனப்படும் கற்றுவல்ல சான்றோர்.

மூன்று, தாழ்விலாச் செல்வர் எனப்படும் வள்ளல்கள்.

புங்குடுதீவு, தக்கார் பலரையும் தாழ்விலாச் செல்வர் மிகப்பலரையும் பெற்றுப் பொலியும் ஊர்.

கல்வியையும் செல்வத்தையும் கண்ணெனப் போற்றிச் செல்வத்துப் பயன் ஈதல், என்பதற்கு உதாரணமாக வாழ்ந்த ஓர் உத்தமரைப் புங்குடுதீவு மட்டுமல்ல, தமிழினமும் இந்த நாடும் இழந்து தவிக்கின்றது.

புங்குடுதீவு மக்களிடமுள்ள உயிர்ப்பண்பு தம்மை வளர்த்தெடுத்த அந்தப் பொன் பூமியை என்றும் மறவாதிருப்பதாகும். அவர்களுடைய உடல் எங்கு கிடந்தாலும் உயிர் ஊரையே நினைந்து கிடக்கும். இது நானறிந்த உண்மை இல்லையானால் அமரர் மயில்வாகனம், தான் பிறந்த நாட்டை வளம்படுத்த இத்தனை பெரும் பணிகளைச் செய்திருக்க மாட்டார். அவரு டைய பொன்மேனி அறிவையும் கருணையையும் பொழியும். அவரது ஒளிமிக்க கண்கள், இதழ்களில் தவழும் புன்னகை ஒருமுறை பார்த்தவரையும் நினை வில் இருத்திவிடும்.

இப்படிப்பட்டவர்கள் இவ்வுலகில் தோன்றுவதற்கு ஒரு நோக்கமிருக்கிறது. அவர்களது பிறப்பு ஒரு தற்செயல் நிகழ்ச்சியல்ல. அவர்கள் ஒரு செய்தியோடு வந்தார்கள், சொன்னார்கள், செய்தார்கள், திரும்பிவிட்டார்கள்.

இந்தச் சிறந்த நடிகன் இன்னும் கொஞ்சநேரம் மேடையில் நின்று நடிக்கலாமே என நாம் ஆதங்கப்படுகிறோம். ஆனால் என்ன செய்வது; கூத்தனார் ஆக்கிய பாத்திரப்படைப்பு அப்படி. கதை முடிந்துவிட்டது. அவர் மேடையைவிட்டு இறங்கிவிட்டார்.

இந்த அறுபத்தாறு ஆண்டில் அவர் ஆற்றிய பணியை வரலாறு மறக்காது.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந் தனரே.

வித்துவான். க.ந. வேலன்.

உ

# அமரர் நா. க. மயில்வாகனம்
# உள்ளம் கவர்ந்த உத்தமர்

எந்நேரமும் சிரித்த முகம், கூப்பியகரங்கள், இனித்த பார்வை, இதமான வார்த்தைகள், உபசரிக்கும் பண்பு. இத்தனையும் கொண்ட மயில்வாகனனார் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உத்தமர். அவரைக் காணும் போது எல்லாம் "என்ன மாப்பிள்ளை, எப்படிச் சுகம்" என்று என்னையும் அறியா மல் குசலம் விசாரித்துக் கொள்வேன்.

மயில்வாகனார் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திரு.நா. கந்தையா என்ற பெருமகனாரின் புத்திரர். புங்குடுதீவில் கண்ணகை அம் மன் ஆலயம், வீரகத்தி விநாயகர் ஆலயம் முதலானவற்றுக்குத் திருப்பணிச் சபையில் இருந்து நன்கு உழைத்தவர். புங்குடுதீவு மகாவித்தியாலயத்துக்கு ஒரு மைலுக்கு அப்பால் உள்ள சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இருந்து நல்ல தண்ணீர்க் கிணறு தோண்டி குழாய் நீர் கொடுத்தவர்.

இவர்கள் இளமையில் மைத்துனர். மு. கனகரத்தினம் அவர்களுடன் கொழும் புக்கு வந்து அவருக்கு உதவியாக இருந்து வர்த்தகத்தில் ஈடுபட்டார். பின்பு போதிராஜமாவத்தையில் தாசன் றேடிங் கம்பெனியை உருவாக்கி நிர்வகித்து வந்தார். அதன்பின்பு நாலாம் குறுக்குத் தெருவில் நா.க. மயில்வாகனம் கம் பனியை நிறுவி திறம்பட நடாத்தி வந்தார். அப்பொழுது கொழும்பு கதிரேசன் வீதியில் உள்ள ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் பஞ்சாயத்துச் சபை யில் இடம் பெற்றார். அவ்வாலயத்தைப் புனரமைத்துச் சிறப்பித்த பெருமை இவருக்கு உண்டு. கொழும்பில் உள்ள இதர ஆலயங்களின் கும்பாபிஷேக விசேடங்கள் எல்லாவற்றிலும் கலந்து சிறப்பிப்பார்.

இந்தியாவில் சிதம்பரத்தில் உள்ள மடம் ஒன்றைப் புனரமைத்து இலங்கை அடியார்களுக்கும் இந்திய அடியார்களுக்கும் ஒருமைப்பாட்டுடன் தங்கி இருந்து பயன்பெற வைத்துள்ளமை பாராட்டத்தக்கது.

வர்த்தகத்தில் வந்த வருமானத்தை ஈசன் தந்தது சமய, சமூகப்பணிக்கு என்று கூசாமல் அள்ளி அள்ளி வழங்கிவந்தமை பாராட்டுக்குரியது. ஏழைக ளுக்கு உதவும் பொழுதும், ஆலயங்களுக்கு வழங்கும் பொழுதும் புண்ணிய கைங்கரியம் என்று மகிழ்ந்து வழங்குவார்.



இவரது வாழ்க்கைத் துணைவியாரும் அருகிருந்து முகம் மலர்ந்து இன் சொற்களால் இதம் பேசி உபசரிக்கும் சிறப்புப் பெற்றவர். கோயில் கும்பா பிஷேகங்களுக்கு இருவருமே சென்று பணிகள் புரிந்து வருவதை அனைவரும் நன்கு அறிவர். தர்ம சிந்தனையே அவர்களுக்கு எப்பொழுதும். இருந்து வந்தது.

இத்தனை சிறப்பாக தெய்வீகத் தொண்டும் சமூகத் தொண்டும் தமிழ்த் தொண்டும் ஆற்றிய பொழுதும் விதிவசத்தால் சமீபத்தில் அவருக்கு ஏற்பட்ட சுகவீனம் தாக்கத்தைக் கொடுத்தது. சுகவீன காலத்திலும் கூட புண்ணிய பூமியாகிய இந்தியாவுக்குச் சென்று தலயாத்திரைகள் செய்து வந்தார். "தர்மம்தான் தலைகாத்தது இவரை" என்றே சொல்லலாம். இந்து ஸ்தாபனங்கள் திரு. நா.க. மயில்வாகனம் அவர்களின் பிரிவுத்துயரை தாங்க முடியாது நிற்கும்.

இவரைப் பிரிந்து துயருறும் பாரியாருக்கும் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளை களுக்கும் இனத்தவர்களுக்கும், நண்பர்களுக்கும் நாம் எமது ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவிக்கின்றோம்.

நேற்று இருந்தவர் இன்று இல்லை என்னும் பெருமைதான் உலகுக்கு உண்டு. அதனால் அவர்தம் கடமையை இவ்வுலகில் வழுவாது நிறைவேற்றினார். இனி சுவர்க்கத்திலும் கூட இவர்களின் சிறந்த பணிகள் தொடர வேண்டும் என இறைவன் பணித்துவிட்டான் போலும்!

இவ்வுலகம் உள்ளவும் மாப்பிள்ளை நா. க. மயில்வாகனம் அவர்கள் நாமம் நிலைத்திருக்க நமது ஜிந்துப்பிட்டி முருகப் பெருமான் துணை நிற்பாராக.

தேசபந்து. வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை
அகில இலங்கை சமாதான நீதவான்,
ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தர்மகர்த்தா.

## விருத்தம்

(1) சீர்தரும் தென்றற் காற்றுத்
தென்திசை இருந்து வீசப்
பேர்பெறும் கண்ணகை அம்மன்
பேரருள் வளங்கு மூராம்
ஊர்புகழ் புங்குடு தீவில்
உதித்திட்ட நாகநாதர் கந்தையா
ஏர்தரும் வள்ளி யம்மையை
எழில்மணம் புரிந்து வாழ்ந்தார்.

(2) பண்பான பராசக்தி யோடு
காந்திமதி சிவக் கொழுந்து
எண்ணரும் நலஞ்சேர் கற்பகம்
எழில்சேர் மயில்வா கனனோடு
தண்ணளி சேர்ந்த ஒருவன்
தர்மலிங்கம் என்னு ம் இவரைப்
புண்ணியப் பலனாற் பெற்றுப்
புகழுடன் விளங்கி நின்றார்.

(3) இவர்களில் மயில்வா கனனார்
இயற்றமிழ் பயின்ற பின்னர்
எவர்களும் விரும்பும் கொழும்பில்
இரும்பொருள் ஈட்டவந்து
பவவினை போக்கும் கதிர்காமக்
கந்தனின் அருளைப் பெற்று
என்.கே. மயில்வாகனம் கொம்பனி
எழில் பெற ஆக்கினாரே.

(4) கொம்பனி ஆக்கி நல்ல
செழும் பொருள் பெற்று வாழ்நாள்
கார்த்திகேசு மகளாய் வந்த
கனகம் மாவை மணந்து
முருகதாஸ் பங்கயச் செல்வி
செம்மனச்செல்வி( யோடு )
பிறேமளச் செல்வி என்னு ம்
பிள்ளைகள் பெற்று வாழ்ந்தார்.



5) பெற்றதம் பிள்ளை கட்குப்
பெருமணஞ் செய்து வைத்தார்
சுற்றத் தவர்கள் மகிழச்
செய்கடன் பலவுஞ் செய்தார்
மற்றும் அயலார் தமக்கு
மதிப்போ டுதவி செய்தார்
பற்றிலா வாழ்வு வாழப்
பரமனை ஏத்தி நின்றார்.

(6) கொழும்பு கதிரேசன் வீதி
அமைந்துள கதிரேசன் கோவில்
செழும்பொருட் காப்பா ளராக
இருபது ஆண்டு காலம்
விழுமிய பணிகள் செய்து
கோவிலின் மேம்பாட் டிற்காக
வழுவிலாத் தொண்டு செய்து
வையத்தில் புகழைப் பெற்றார்.

(7) புங்குடு தீவில் உள்ள
மூத்த நயினார் புலத்து
தங்கிய வீரகத்தி விநாயகர்
ஆலயம் புனர்நிர்மாணித்து
எங்கள் அப்பன் இவர்ந் தருள
இதமான தேரும் ஆக்கி
மங்காத திருப்பணி செய்த
மகிபனாய் வாழ்ந்து நின்றார்.

(8) தான் பிறந்த ஊரில் உள்ள
மகாவித் தியாலய மாணவர்
ஏன் பிறந்தோம் இந்த வூரில்
இரும் விடாய்க்கு நீர் அருந்த
ஏன்ற நன்னீர் கிடைக்கவழி
இல்லையே என்றி ரங்க
ஒன்றுமைல் தூரத்தில் கிணறு ஆக்கி
ஓடிவரக் குளாய்வழியும் ஆக்கினாரே.

(9) சிறுவயதில் ரிஷிகேசம் வரை
சென்றுமே வணங்கி வந்தார்
மறுவற்ற மனைவியுடன் மார்கழி
மங்காத அருள் பொழியும் தில்லைநாடி
உறுபிறவி வினைதீர்க்கும் திருவாதிரை
உற்சவத்தைப் பலமுறையும் வணங்கி
இறவாத புண்ணியங்கள்
இறக்கும்வரை செய்து நின்றார்.

(10) மறுவிலா முற்பி றப்பில்
ஆற்றிய புண்ணியப் பலனால்
அறுபதொடு ஐந்து சேர்ந்த
ஆண்டுகள் நலமாய் வாழ்ந்தாய்
சிறு அளவிற் செய்த தீவினையால்
சின்னாள் உடனலங் குன்றி நின்றாய்
உறுவினைப் பலனை யாரும்
ஒழித்திடல் முடியுமோ தான்.

(11) தலைவனே எங்கள் அப்பா
தண்ணளி வதன ஐயா
நிலையிலா வாழ்வு தன்னை
நின்பிரி வதனால் யாமும்
மலையின்மேல் விளக்குப் போல
மனதினிற் றெரிந்து கொண்டோம்
அலைபுனற் சடில ஐயன்
அருள்பெற்று வாழி வாழி.

திருச்சிற்றம்பலம்.

ஆக்கம்.
பண்டிதர் மா. மாணிக்கம்
வேலணை கிழக்கு
வேலணை.
25.3.1995



## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்.
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தல மொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி

ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் மூட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனி தெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி யென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.



*திருச்சிற்றம்பலம்*

## விநாயகர் கவசம்

அறுசீர்கழி நெடிலாசிரிய
விருத்தம்

வளர் சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்த்த சென்னி
அளவுபடா வதிகசவுந் தரதேகம்
தோற்கடர் தாம் அமர்ந்து காக்க
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய
காசிபர் காக்க புருவந் தம்மைத்
தளர்வின் மகோ தரர்காக்க
தடவிழிகள் பாலச் சந்திரனார் காக்க
கவின் வளரும் அதரங்கச முகங்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில் சி புகம் கிரிசைசு தர்காக்க
நனிவாக்கை விநாயகர்தாங் காக்க
அவிர்நகை துன்முகர் காக்க அள்ளெழிற்
செஞ்செவி பாச பாணி காக்க
தவிர் தலுறா திளங் கொடிபோல் வளர்மணி
நாசியைத் சிந்திதார்த்தர் காக்க.
காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனிகாக்க
களம் கணேசர் காக்க
வாமமுறுமிரு தோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின வினாயகன்
காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கண நாதர் காக்க
அகட்டினைத் துலங்கே ரம்பர் காக்க
பக்கமிரண்டையுந் தராதரர் காக்கப்
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கி லிங்கம்
வியாள பூடணர்தாங் காக்க
தக்க குய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க சகனத்தையல்லல்
உக்க கணபன் காக்க ஊருவை
மங்கள மூர்த்தி யுவந்து காக்க

தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க
விருபதமேக தந்தர் காக்க
வாழ் கரங்கிப் பிரப்பிரசாதனர் காக்க
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ்தரச் செய்யா சாபூரகர் காக்க
விரல்பதும வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க
அக்கினியிற் சித்தீசர் காக்க
விக்கினவர்த் தனர் மேற்கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்
கசகன்னன் காக்க திகழ் உதீசி
தக்கநிதிபன் காக்க.
வடகிழக்கி லீசாந் தனரே காக்க
ஏகதந்தர் பகன்முழுதுங் காக்க
விரவினுஞ் சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின கிருது காக்க
இராக்கதர்பூத முறுவே தாள
மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவிலாத வேக முறு
பிணிபலவும் விலக்கு புபாசாங்குசர்
தாம் விரைந்து காக்க
மதிஞானம் தவம் தான மானமொளி
புகழ் குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனம்தானி யங்கிரகம்
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க
காமர் பவுத்திரர் முன்னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க
வென்றி சீவி தங்கபிலர் காக்க
கரியாதி யெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனை முக் காலமுமோ
திடினு ம்பா லிடையூறொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதினாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேகமாகி மன்னும்.

*விநாயகர் கவசம் முற்றிற்று*



உ

திருச்சிற்றம்பலம்

**திருஞானசம்பந்த சுவாமிகள்**

**அருளிச் செய்த**

# தேவாரப் பதிகங்கள்

## முதற்றிருமுறை

### திருப்பிரமபுரம்

**பண் - நட்டபாடை**

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 1

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரி யார்கழல்கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூருமிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 5

மறைகலந்தவொலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தவினை வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழினீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 6

சடைமுயங்குபுன லன்னலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிக டோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 8

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவியபெம் மானிவனன்றே. 10

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

**திருக்கோலக்கா**

**பண் - தக்கராகம்**

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. 1



பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டா னஞ்சை யுலக முய்யவே. 2

பூணற் பொறிகொ ளரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. 3

தழுக்கொள் பாவந் தளரவேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே. 4

மயிலார் சாயன் மாதோர் பாகமா
எயிலார் சாய வெரித்த வெந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. 5

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாத மடைந்து வாழ்மினே. 6

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலான் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கற் றுயர மில்லையே. 7

எறியார் கடல்சூ ழிலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியாற் றொழுவார் வினைக ணீங்குமே. 8

நாற்ற மலர்மே லயனு நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாத மேத்தி வாழ்மினே. 9

பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. 10

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

## திருப்பாச்சிலாச்சிராமம்

**பண் - தக்கராகம்**

**திருச்சிற்றம்பலம்**

துணிவளர் திங்க டுளங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ விவர்மாண்பே. 1

கலைபுனை மானுரி தோலுடையாடை
கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர்
தம்மடிகள் ளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ வேழையைவாட
விடர்செய்வதோ விவரீடே. 2

வெஞ்சுடராடுவர் துஞ்சிருண்மாலை
வேண்டுவர்பூண்பது வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச்
சிதை செய்வதோ விவர்சீரே. 3

கனமலர்க்கொன்றை யலங்கலிலங்கக்
கனறரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட
மயல்செய்வதோ விவர்மாண்பே. 4

மாந்தர்தம்பானறு நெய்மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழ றாளமொர்வீணை
முதிரவோர் வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தணிமார்பரோ தையலைவாடச்
சதுர்செய்வதோ விவர்சார்வே. 5

நீறுமெய்பூசி நிறைசடைதாழ
நெற்றிக்கண் ணாலுற்றுநோக்கி
ஆறதுசூடி யாடரவாட்டி
யைவிரற் கோவணவாடை
பாறருமேனியர் பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறிய ரேழையைவாட
விடர்செய்வதோ விவரீடே. 6

பொங்கிளநாகமோ ரேகவடத்தோ
டாமைவெண் ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர்கொ லாமிவரென்ன

அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச்
சதிர்செய்வதோ விவர்சார்வே. 7

ஏவலத்தால்விச யற்கருள்செய்து
இராவண னையீடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய
மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கடேவரோ சேயிழைவாடச்
சிதைசெய்வதோ விவர்சேர்வே. 8

மேலதுநான்முக னெய்தியதில்லை
கீழது சேவடிதன்னை
நீலதுவண்ணனு மெய்தியதில்லை
யெனவிவர் நின்றதுமல்லால்
ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப்
பழிசெய்வதோ விவர்பண்பே. 9

நாணொடுகூடிய சாயினரேனு
நகுவ ர்வரிருபோதும்
ஊணொடுகூடிய வுட்குநகையா
லுரைக ளவைகொளவேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பூணெடுமார்பரோ பூங்கொடிவாடப்
புனைசெய்வதோ விவர்பொற்பே. 10

அகமலியன்பொடு தொண்டர்வணங்க
வாச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
றகைமலிதண்டமிழ் கொண்டிவையேத்தச்
சாரகி லாவினைதானே. 11

திருச்சிற்றம்பலம்



## திருமருகல்

### பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுண் மெலிவே. 1

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமான் முதல்வா வெனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ விவளே சறவே. 2

அறையார் கழலும் மழல்வா யரவும்
பிறையார் சடையும் முடையாய் பெரிய
மறையார் மருகன் மகிழ்வா யிவளை
இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே. 3

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலி நீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகன் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே. 4

துணி நீ லவண்ணம் முகிறோன் றியன்ன
மணி நீ லகண்டம் முடையாய் மருகல்
கணி நீ லவண்டார் குழலா ளிவடன்
அணி நீ லவொண்கண் ணயர்வாக் கினையே. 5

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன் றுடையாய் மருகல்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ வடியா ளிவளே. 6

(3)

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவென்
எழுவா ணினைவா ளிரவும் பகலும்
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
தொழுவா ளிவளைத் துயராக் கினையே. 7

இலங்கைக் கிறைவன் விலங்கல் லெடுப்பத்
துலங்கவ் விரலூன் றலுந்தோன் றலனாய்
வலங்கொண் மதிள்சூழ் மருகற் பெருமான்
அலங்கல் லிவளை யலராக் கினையே. 8

எரியார் சடையும் மடியும் மிருவர்
தெரியா ததொர்தீத் திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமான்
அரியா ளிவளை யயர்வாக் கினையே. 9

அறிவில் சமணும் மலர்சாக் கியரும்
நெறியில் லன்செய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமான்
நெறியார் குழலி நிறைநீக் கினையே. 10

வயஞா னம்வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலால்
இயன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார்
வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. 11

திருச்சிற்றம்பலம்





## கோளறு திருப்பதிகம்

### பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்லவீணைதடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம்பிரண்டுமுடனே
ஆசறுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

என்பொடுகொம்பொடாமை யிவைமார்பிலங்க
வெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலை புனல்சூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனால்
ஒன்பதொடொன்றொடேழு பதினெட்டொடாறு
முடனாயநாள்களவைதாம்
அன்பொடுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

உருவளர்பவளமேனி யொளிநீறணிந்து
வுமையோடும்வெள்ளைவிடைமேல்
முருகலர்கொன்றைதிங்கள் முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
திருமகள்கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வமானபலவும்
அருநெதிநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

மதிநுதன்மங்கையோடு வடபாலிருந்து
மறையோதுமெங்கள்பரமன்
நதியொடுகொன்றைமாலை முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
கொதியுறுகாலனங்கி நமனோடுதூதர்
கொடுநோய்களானபலவும்
அதிகுணநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

நஞ்சணிகண்டனெந்தை மடவாடனோடும்
விடையேறுநங்கள்பரமன்
துஞ்சிருள்வன்னிகொன்றை முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்னு
மிகையானபூதமவையும்
அஞ்சிடுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

வாள்வரியதளதாடை வரிகோவணத்தர்
மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றை நதிசூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனால்
கோளரியுழுவையோடு கொலையானைகேழல்
கொடுநாகமோடுகரடி
ஆளரிநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

செப்பிளமுலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறுசெல்வனடைவார்
ஒப்பிளமதியுமப்பு முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
வெப்பொடுகுளிரும்வாத மிகையானபித்தும்
வினையானவந்துநலியா
அப்படிநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

வேள்படவிழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றை மலர்சூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனால்
ஏழ்கடல்சூழிலங்கை யரையன்றனோடு
மிடரானவந்து நலியா
ஆழ்கடனல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

பலபலவேடமாகும் பரனாரிபாகன்
பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்கு முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்



மலர்மிசையோனுமாலு மறையோடுதேவர்
வருகாலமானபலவும்
அலைகடன்மேரு நல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

கொத்தலர்குழலியோடு விசையற்குநல்கு
குணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாக முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
புத்தரொடமணைவாதி லழிவிக்குமண்ண
றிருநீறுசெம்மைதிடமே
அத்தகுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

தேனமர்பொழில்கொளாலை விளைசெந்நெறுன்னி
வளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனாதியாய பிரமாபுரத்து
மறைஞானஞானமுனிவன்
தானுறுகோளுநாளுமடியாரைவந்து
நலியாதவண்ணமுரைசெய்
ஆனசொன்மாலையோது மடியார்கள்வானி
லரசாள்வராணைநமதே.

## திருநீற்றுப்பதிகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் றிருநீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே, 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே. 3

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் றிருநீறே. 4

பூச வினியது நீ நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே. 5

அருத்தம தாவது நீறு வவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே. 6

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் றிருநீறே. 7

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே. 8

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடாக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் றிருநீறே. 10

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்



## திருநெடுங்களம்

### பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினு லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 1

கலைத்தெழுந்த வெண்டிரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே 2

நின்னடியே வழிபடுவா னிமலாநினைக் கருத
என்னடியா னுயிரைவவ்வே லென்றடர்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 3

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர்பான் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கு மவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்று ணிழற்கீழ்
நிலைபுரிந்தா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 4

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா வன்பினோடுந் தலைவநின்று ணிழற்கீழ்
நீங்கிநில்லா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 5

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய வாதிதேவ னடியிணையே பரவும்
திருத்தர்கீத ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 6

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 7


குன்றினுச்சி மேல்விளங்குங் கொடிமதில்சூ ழிலங்கை
அன்றிநின்ற வரக்கர்கோனை யருவரைக்கீ ழடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியா லேத்தியிராப் பகலும்
நின்றுநைவா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 8

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கியநான் முகனுஞ்
சூழவெங்கு நேடவாங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன் னடியின்
நீழல்வாழ்வா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 9

வெஞ்சொற்றஞ்சொல் லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன் றறியார்
துஞ்சமில்லா வாய்மொழியாற் றோத்திரநின் னடியே
நெஞ்சில்வைப்பா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே. 10

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகிற் சிரபுரக்கோ னலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம்ப றையுமே. 11

திருச்சிற்றம்பலம்





## திருத்தருமபுரம்

### பண் - யாழ்முரி

திருச்சிற்றம்பலம்

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசை பாடவு மாடுவ
ரவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே.

## பொது

### நமச்சிவாயத் திருப்பதிகம்

### பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளா
நாத னாம நமச்சி வாயவே. 1

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்ப னாம நமச்சி வாயவே. 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாம நமச்சி வாயவே. 3

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாம நமச்சி வாயவே. 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாய்வே. 5

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே. 6

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாம நமச்சி வாயவே. 7

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ளாம நமச்சி வாயவே. 8

போதன் போதன கண்ணனு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே. 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுள் கண்ட னமச்சி வாயவே. 10

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்



உ

திருச்சிற்றம்பலம்

### திருநாவுக்கரசு சுவாமிகள்

அருளிச் செய்த

# தேவாரப் பதிகங்கள்

## திருவதிகைவீரட்டானம்

### பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
    கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
    பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
    குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
    வீரட்டானத் துறையம் மானே. 1

நெஞ்சம் முமக்கே யிடமா கவைத்தே
    னினையா தொருபோ துமிருந் தறியேன்
வஞ்சம் மிதுவொப் பதுகண் டறியேன்
    வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னைநலி வதனை
    நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்
அஞ்சே லுமென்னீ ரதிகைக் கெடில
    வீரட்டானத் துறையம் மானே. 2

பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
    படுவெண் டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றாற்
    சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்

பிணிந்தார் பொடிகொண் டுமெய்பூ சவல்லீர்
பெற்றமேற் றுகந்தீர் சுற்றும்வெண் டலைகொண்
டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே. 3

முன்னம் மடியே னறியா மையினான்
முனிந்தென் னைநலிந் துமுடக் கியிடப்
பின்னை யடியேன் உமக்கா ளும்பட்டேன்
சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
தலையா யவர்தங் கடன் ஆவதுதான்
அன்ன நடையா அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே. 4

காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையாற்
கரைநின் றவர்கண் டுகொளென் றுசொல்லி
நீத்தா யகயம் புகநூக் கியிட
நிலைக்கொள் ளும்வழித் துறையொன் றறியேன்
வார்த்தை யிதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
ஆர்த்தார் புனலா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 5

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
றமிழோ டிசைபா டன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே
னுன்னா மமென்னா வின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வா
யுடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே. 6

உயர்ந்தேன் மனைவாழ்க் கையுமொண் பொருளு
மொருவர் தலைகா வலிலா மையினால்
வயந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பயந்தே யென்வயிற் றினகம் படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர்த் திடநான்
அயர்ந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 7



வலித்தேன் மனைவாழ்க் கைமகிழ்ந் தடியேன்
வஞ்சம் மனமொன் றுமிலா மையினால்
சலித்தா லொருவர் துணையா ருமில்லைச்
சங்கவெண் குழைக்கா துடையெம் பெருமான்
கலித்தே யென்வயிற் றினகம் படியே
கலக்கி மலக்கிட் டுக்கவர்ந் துதின்ன
அலுத்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே. 8

பொன்போ லமிளிர் வதொர்மே னியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்
என்போ லிகளும் மையினித் தெளியா
ரடியார் படுவ திதுவே யாகில்
அன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

போர்த்தா யங்கொரா னையினீ ருரிதோல்
புறங்கா டரங்கா நடமா டவல்லாய்
ஆர்த்தா னரக்கன் றனை மால் வரைக்கீ
ழடர்த்திட் டருள்செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் மெழுந்தா
லென்வே தனையா னவிலக் கியிடாய்
ஆர்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே. 10

திருச்சிற்றம்பலம்

பொது

## மறுமாற்றத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோ
நரகத்தி லிடர்ப்படோ நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே. 1

(6)

அகலிடமே யிடமாக வூர்க டோறு
மட்டுண்பா ரிட்டுண்பார் விலக்கா ரையம்
புகலிடமா மம்பலங்கள் பூமி தேவி
யுடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே
இகலுடைய விடையுடையா னேன்று கொண்டா
னினியேதுங் குறைவிலோ மிடர்க டீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே. 2

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோ
மாதேவா மாதேவா வென்று வாழ்த்தி
நீராண்ட புரோதாய மாடப் பெற்றோ
நீறணியுங் கோலமே நிகழப் பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே. 3

உறவாவா ருருத்திரபல் கணத்தி னோர்க
ளுடுப்பனகோ வணத்தொடுகீ ளுளவா மன்றே
செறுவாருஞ் செறமாட்டார் தீமை தானு
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்
நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவா யச்சொல்ல வல்லோ நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே. 4

என்றுநா மியாவர்க்கு மிடைவோ மல்லோ
மிருநிலத்தி லெமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்தோ மல்லோஞ்
சிவபெருமான் றிருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறைவுடையோ மல்லோ மன்றே
யுறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே. 5



மூவுருவின் முதலுருவா யிருநான் கான
மூர்த்தியே யென்றுமுப் பத்து மூவர்
தேவர்களு மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும்

நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே யேவி விடுத்தா ரேனுங்
கடவமலோங் கடுமையொடு களவற் றோமே. 6

நிற்பனவு நடப்பனவு நிலனு நீரு
நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
அற்பமொடு பெருமையுமா யருமை யாகி
யன்புடையார்க் கெளிமையதா யளக்க லாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானு மியானு
மாகின்ற தன்மையனை நன்மை யோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற் றோமே. 7

ஈசனையெவ் வுலகினுக்கு மிறைவன் றன்னை
யிமையவர்தம் பெருமானை யெரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைச்
சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய் கின்ற
நேசனை நித்தலு நினையப் பெற்றோ
நின்றுண்பா ரெம்மை நினையச் சொன்ன
வாசக மெல்லா மறந்தோ மன்றே.
வந்தீரார் மன்னவனா வான்றா னாரே. 8

சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
சாம்பலும் பாம்பு மணிந்த மேனி
விடையுடையான் வேங்கை யதண்மே லாடை
வெள்ளிபோற் புள்ளியுழை மான்றோல் சார்ந்த
உடையுடையா னம்மை யுடையான் கண்டீ
ரும்மோடு மற்று முளராய் நின்ற
படையுடையான் பணிகேட்கும் பணியோ மல்லோம்
பாசமற வீசும் படியோ நாமே. 9

நாவார நம்பனையே பாடப் பெற்றோ
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாவென் றெமையாள்வா னமரர் நாத
னயனொடுமாற் கறிவரிய வனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன் றானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங்
குணமாக்க கொள்ளோமெண் குணத்து ளோமே. 10

திருச்சிற்றம்பலம்

## திருமறைக்காடு

### திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1

ஈண்டு செஞ்சடை யாகத்து ளீசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 2

அட்ட மூர்த்திய தாகிய வப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே. 3

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்டசு வண்டரோ
விரிகொள் கோவண வாடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. 4

மலையி னீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழ லேத்தரோ
விலையின் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. 5

பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. 6

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி யணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7




ஆறு சூடு மணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய வெம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி யணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 10

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே. 11

திருச்சிற்றம்பலம்



## திருவதிகைவீரட்டானம்

### பண்—காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண வுரிவை யுடையும், வளரும் பவள நிறமும்,
அண்ணல் அரண் முர ணேறு மகலம் வளாய வரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 1

பூண்டதொர் கேழ லெயிறும் பொன்றிக ழாமை புரள
நீண்டதிண் டோள்வலஞ் சூழ்ந்து நிலாக்கதிர் போலவெண் ணூலும்
காண்டகு புள்ளின் சிறகுங் கலந்தகட் டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 2

ஒத்த வடத்திள நாக முருத்திர பட்ட மிரண்டும்
முத்து வடக்கண் டிகையு முளைத்தெழு மூவிலை வேலும்
சித்த வடமு மதிகைச் சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து
தத்துங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 3

மடமான் மறிபொற்கலையு மழுப்பாம் பொருகையில் வீணை
குடமால் வரையதிண் டோளுங் குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமா றழுவிய பாக மிருநில னேற்ற சுவடும்
தடமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை 4

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 5

கரந்தன கொள்ளி விளக்குங் கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும் பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாள ரறியப்ப டாததொர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 6



கொலைவரி வேங்கை யதளுங் குலவோ டிலங்குபொற் றோடும்
விலைபெறு சங்கக் குழையும் விலையில் கபாலக் கலனும்
மலைமகள் கைக்கொண்ட மார்பு மணியார்ந் திலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 7

ஆடல் புரிந்த நிலையு மரையி லசைத்த வரவும்
பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரங்கொள் கருவி
நாடற் கரியதொர் கூத்து நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து
ஓடுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 8

சூழு மரவத் துகிலுந் துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவ ளஞ்ச வஞ்சா தருவரை போன்ற
வேழ முரித்த நிலையும் விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்.
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை. 9

நரம்பெழு கைகள் பிடித்து நங்கைநடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண் டெடுத்தா னென்பது மொன்று மலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான்வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொனறு மில்லை யஞ்ச வருவது மில்லை. 10

## நமச்சிவாயத்திருப்பதிகம்

### பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 1

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே. 2

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே. 3

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே. 4

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே. 5

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே. 6

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னாடிற்று நமச்சி வாயவே. 7

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே. 8

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாத றிண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைத்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே. 10

திருச்சிற்றம்பலம்



## திருக்கச்சியேகம்பம்

பண்—காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ வங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. 1

தேனோக்குங் கிளிமழலை யுமைகேள்வன் செழும்பவளம்
தானோக்குந் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. 2

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே. 3

அண்டமா யாதியா யருமறையொ டைம்பூதப்
பிண்டமா யுலகுக்கொர் பெய்பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர்தா மலர்தூவிச் சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை யென்மனத்தே வைத்தேனே. 4

ஆறேறு சடையானை யாயிரம்பே ரம்மானைப்
பாறேறு படுதலையிற் பலி கொள்ளும் பரம்பரனை
நீறேறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி
ஏறேறும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. 5

தேசனைத் தேசங்க டொழநின்ற திருமாலால்
பூசனைப் பூசனைக ளுகப்பானைப் பூவின்கண்
வாசனை மலைநிலநீர் தீவளியா காசமாம்
ஈசனை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே. 6

நல்லானை நல்லான நான்மறையொ டாறங்கம்
வல்லானை வல்லார்கண் மனத்துறையு மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேதும்
இல்லானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே. 7

விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரித்தானைப் பதஞ்சந்திப் பொருளுருவாம் புண்ணியனைத்
தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேன் மதின்மூன்றும்
எரித்தானை யெம்மானை யென்மனத்தே வைத்தேனே. 8

ஆகம்பந் தரவணையா னயனறிதற் கரியானைப்
பாகம்பெண் ணாண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோது மிறையானை மதிற்கச்சி
ஏகம்ப மேயானை யென்மனத்தே வைத்தேனே. 9

அடுத்தானை யுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சினமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே. 10

திருச்சிற்றம்பலம்

## திருப்பைஞ்ஞீலி

### திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

உடையர் கோவண மொன்றுங் குறைவிலர்
படைகொள் பாரிடஞ் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
சடையிற் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்லவர்க் கில்லை யவலமே. 1

மத்த மாமலர் சூடிய மைந்தனார்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாந்தொழு தேத்துபைஞ் ஞீலியெம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே. 2

விழுது சூலத்தன் வெண்மழு வாட்படைக்
கழுது துஞ்சிருட் காட்டகத் தாடலான்
பழுதொன் றின்றிப்பைஞ் ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தம்வினை தூளியே. 3



ஒன்றி மாலும் பிரமனுந் தம்மிலே
நின்ற சூழ லறிவரி யானிடம்
சென்று பாரிட மேத்துபைஞ் ஞீலியுள்
என்று மேவி யிருந்த வடிகளே. 4

வேழத் தின்னுரி போர்த்த விகிர்தனார்
தாழச் செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
தாழைத் தண்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியார்
யாழின் பாட்டை யுகந்த வடிகளே. 5

குண்டு பட்டுக் குறியறி யாச்சமண்
மிண்ட ரோடு படுத்துய்யப் போந்துநான்
கண்டங் கார்வயல் சூழ்ந்தபைஞ் ஞீலியெம்
அண்ட வாண னடியடைந் துய்ந்தனே. 6

வரிப்பை யாடர வாட்டி மதகரி
உரிப்பை மூடிய வுத்தம னூருறை
திருப்பைஞ் ஞீலி திசைதொழு வார்கள்போய்
இருப்பர் வானவ ரோடினி தாகவே. 7

கோடல் கோங்கம் புறவணி முல்லைமேல்
பாடல் வண்டிசை கேட்கும்பைஞ் ஞீலியார்
பேடு மாணும் பிறரறி யாததோர்
ஆடு நாக மசைத்த வடிகளே. 8

காரு லாமலர்க் கொன்றையந் தாரினான்
வாரு லாமுலை மங்கையோர் பங்கினன்
தேரு லாம்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியெம்
ஆர்கி லாவமு தையடைந் துய்ம்மினே. 9

தருக்கிச் சென்று தடவரை பற்றலும்
நெருக்கி யூன்ற நினைந்து சிவனையே
அரக்கன் பாட வருளுமெம் மானிடம்
இருக்கை ஞீலியென் பார்க்கிட ரில்லையே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்புகலூர்

## திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எண்ணுக்கே னென்சொல்லி யெண்ணு கேனோ
வெம்பெருமான் றிருவடியே யெண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தா
யொக்க வடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 1

அங்கமே பூண்டா யன லாடினா
யாதிரையா யானிழலா யானே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்ச டையினாய்
பாம்போடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தி னஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே யுன்னடிக்கே போது கின்றேன்
றிருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை யேந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையு மென்மேற் றர வறுத்தா
யவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 3

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி யாதியாய் வேத மாகி
யலர்மேலா னீர்மேலா னாய்ந்துங் காணாப்
பொருளாவா யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 4



நீரேறு செஞ்சடைமே னிலாவெண் டிங்க
ணீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டநங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 5

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்க ளெரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டான மேயாய்
மருவினியார் மளத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையா யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 6

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமே லலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்ட மாடி
நான்முகனு மிந்திரனு மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 7

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்றோ லுடையாய் மகிழ்ந்து நின்றாய்
பொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியே னிட்டுக் கூறி நின்று
கொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 8

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னையுந் தண்மதியும் பாம்பு நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
யக்காரம் பூண்டானே யாதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 9

ஒருவனையு மல்லா துணரா துள்ள
முணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையு மூவரையு மென்மே லேவி
யில்லாத தரவறுத்தாய்க் கில்லே னேலக்
கருவரைசூழ் கான லிலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையா யுன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 10

திருச்சிற்றம்பலம்



உ

திருச்சிற்றம்பலம்

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்

### அருளிச்செய்த

# தேவாரப் பதிகங்கள்

## திருவெண்ணெய்நல்லூர்

பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 1

நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 2

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அன்னேயுனக் காளாயினி யல்லேனென லாமே. 3

முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்ற மூர்த்தீ
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக்குறிக் கொண்ணீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அடிகேளுனக் காளாயினி யல்லேனென லாமே. 4

பாதம்பணி வார்கள்பெறும் பண்டமது பணியாய்
ஆதன்பொரு ளானேனறி வில்லேனரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆதீயுனக் காளாயினி யல்லேனென லாமே. 5

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றுமெரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அண்ணாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 6

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆனாயுனக் காளாயினி யல்லேனென லாமே. 7

ஏற்றார்புர மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆற்றாயுனக் காளாயினி யல்லேனென லாமே. 8

மழுவாள்வல னேந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே. 9

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுரையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே. 10

திருச்சிற்றம்பலம்

## திருவதிகைத்திருவீரட்டானம்

### பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாட
லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னு
மாசையால் வாழ்கின்ற வறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட்டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 1



முன்னையெம் பெருமானை மறத்தென்கொன் மறவா
தொழிந்தென்கொன் மறவாத சிந்தையால் வாழ்வேன்
பொன்னேநன் மணியேவெண் முத்தேசெம் பவளக்
குன்றமே யீசனென் றுன்னையே புகழ்வேன்
அன்னையென் னத்தாவென் றமரரா லமரப்
படுவானை யதிகைமா நகருள்வாழ் பவனை
என்னையென் னெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 2

விரும்பினேற் கெனதுள்ளம் விடகிலா விதியே
விண்ணவர்தம் பெருமானே மண்ணவர்நின் றேத்துங்
கரும்பேயென் கட்டியென் றுள்ளத்தா லுள்கிக்
காதல்சேர் மாதரள் கங்கையா ணங்கை
வரும்புனலுஞ் சடைக்கணிந்து வளராத பிறையும்
வரியரவு முடன்றுயில வைத்தருளு மெந்தை
இருங்புனல்வந் தெறிகெடில வடவீரட்டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 3

நாற்றானத் தொருவனை நானாய பரனை
நள்ளாற்று நம்பியை வெள்ளாற்று விதியைக்
காற்றானைத் தீயானைக் கடலானை மலையின்
றலையானைக் கடுங்கலுழிக் கங்கைநீர் வெள்ள
வாற்றானைப் பிறையானை யம்மானை யெம்மான்
றம்மானை யாவர்க்கு மறிவரிய செங்கண்
ஏற்றானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 4

சேந்தர்தாய் மலைமங்கை திருநிறமும் பரிவு
முடையானை யதிகைமா நகருள்வாழ் பவனைக்
கூந்தருழ் புனன்மங்கை குயிலன்ன மொழியாள்
சடையிடையிற் கயலினங்கள் குதிகொள்ளக் குலாவி
வாய்ந்தநீர் வரவுந்தி மராமரங்கள் வணக்கி
மறிகடலை யிடங்கொள்வான் மலையாரம் வாரி
ஏந்துநீ ரெறிகெடில வடவீரட்டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 5

மைம்மான மணிநீல கண்டத்தெம் பெருமான்
வல்லேனக் கொம்பணிந்த மாதவனை வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்மதியும் பாம்புந்
தடுமாறுஞ் சடையானைத் தாழ்வரைக்கை வென்ற

வெம்மான மதகரியி னுரியானை வேத
விதியானை வெண்ணீறு சண்ணித்த மேனி
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 6

வெய்தாய வினைக்கடலிற் றடுமாறு முயிர்க்கு
மிகவிரங்கி யருள்புரிந்து வீடுபே றுக்கம்
பெய்தானைப் பிஞ்ஞகனை மைஞ்ஞவிலுங் கண்டத்
தெண்டோளெம் பெருமானைப் பெண்பாக மொருபால்
செய்தானைச் செக்கர்வா னொளியானைத் தீவா
யரவாடு சடையானைத் திரிபுரங்கள் வேவ
எய்தானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 7

பொன்னானை மயிலூர்தி முருகவே டாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர்வா னந்தி

அன்னானை யமரர்கட்கம் பெருமானைக் கருமா
னுரியானை யதிகைமா நகருள்வாழ் பவனை
என்னானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 8

திருந்தாத வாளவுணர் புரமூன்றும் வேவச்
சிலைவளைவித் தொருகணையாற் றொழில்பூண்ட சிவனைக்
கருந்தாள மதக்களிற்றி னுரியானைப் பெரிய
கண்மூன்று முடையானைக் கருதாத வரக்கன்
பெருந்தோள்க ளிலைந்து மீரைந்து முடியு
முடையானைப் பேயுருவ மூன்றுமுற மலைமேல்
இருந்தானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 9

என்பினையே கலனாக வணிந்தானை யெங்க
ளெருதேறும் பெருமானை யிசைஞானி சிறுவன்
வன்வனைய வளர்பொழில்சூழ் வயனாவ லூர்க்கோன்
வள்றொண்ட னாரூரன் மதியாது சொன்ன
அன்பனை யாவர்க்கு மறிவரிய வத்தர்
பெருமானை யதிகைமா நகருள்வாழ் பவனை
என்பொன்னை யெறிகெடில் வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. 10



## திருக்கோளிலி

### பண் - நட்டராகம்

### திருச்சிற்றம்பலம்

நீளநினைந்தடி யேனுமைநித்தலுங் கைதொழுவேன்
வாளனகண்மட வாளவள்வாடி வருந்தாமே
கோளியெம்பெரு மான்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலையெம்பெரு மானவையட்டித் தரப்பணியே. 1

வண்டமருங்குழ லாளுமைநங்கையோர் பங்குடையாய்
விண்டவர் தம்புர மூன்றெரிசெய்தவெம் வேதியனே
தெண்டிரைநீர்வயல் சூழ்திருக்கோளிலி யெம்பெருமான்
அண்டமதாயவ னேயவையட்டித் தரப்பணியே. 2

பாதியோர்பெண்ணை வைத் தாய்படருஞ்சடைக் கங்கைவைத்தாய்
மாதர்நல்லார்வருத் தமதுநீயும றிதியன்றே
கோதில்பொழில்புடை சூழ்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆதியேயற்புத னேயவையட்டித் தரப்பணியே. 3

சொல்லுவதென்னுனை நான்றொண்டைவாயுமை நங்கையைநீ
புல்கியிடத்தில்வைத் தாய்க்கொருபூசல்செய் தாருளரோ
கொல்லைவளம்புற விற்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அல்லல்களைந்தடி யேற்கவையட்டித் தரப்பணியே. 4

முல்லைமுறுவ லுமையொருபங்குடை முக்கணனே
பல்லயர்வெண்டலை யிற்பலிகொண்டுழல் பாசுபதா
கொல்லைவளம்புற விற்றிருக்கோளிலி யெம்பெருமான்
அல்லல்களைந்தடி யேற்கவையட்டித் தரப்பணியே. 5

குரவமருங்குழ லாளுமைநங்கையொர் பங்குடையாய்
பரவைபசிவருத் தமதுநீயும றிதியன்றே
குரவமரும்பொழில் சூழ்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அரவமசைத்தவ னேயவையட்டித் தரப்பணியே. 6

எம்பெருமானுனை யேநினைந்தேத்துவ னெப்பொழுதும்
வம்பமருங்குழ லாளொருபாக மமர்ந்தவனே
செம்பொனின்மாளிகை சூழ்திருக்கோளிலி யெம்பெருமான்
அன்பதுவாயடி யேற்கவையட்டித் தரப்பணியே. 7

## திருவாரூர்

### பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணா
வெம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே. 1

கட்ட மும்பிணி யுங்களை வானைக்
காலற் சீறிய காலுடை யானை
விட்ட வேட்கைவெந் நோய்களை வானை
விரவி னால்விடு தற்கரி யானைப்
பட்ட வார்த்தை படநின்ற வார்த்தை
வாரா மேதவி ரப்பணிப் பானை
அட்ட மூர்த்தியை மட்டவிழ் சோலை
யாரூ ரானை மறக்கலு மாமே. 2

கார்க்கின் றமழை யாய்ப்பொழி வானைக்
கலைக்கெ லாம்பொரு ளாயுடன் கூடிப்
பார்க்கின் றவுயிர்க் குப்பரிந் தானைப்
பகலுங் கங்குலு மாகிநின் றானை
ஓர்க்கின் றசெவி யைச்சுவை தன்னை
யுணரு நாவினைக் காண்கின்ற கண்ணை
ஆர்க்கின் றகட லைமலை தன்னை
யாரூ ரானை மறக்கலு மாமே. 3

செத்த போதினின் முன்னின்று நம்மைச்
சிலர்கள் கூடிச் சிரிப்பதன் முன்னம்
வைத்த சிந்தையுண் டேமன முண்டே
மதியுண் டேவிதி யின்பய னுண்டே
முத்த னெங்கள்பி ரானென்று வானோர்
தொழநின் றதிமி லேறுடை யானை
அத்த னெந்தைபி ரானெம்பி ரானை
யாரூ ரானை மறக்கலு மாமே. 4



செறிவுண் டேன்மனத் தாற்றெளி வுண்டேற்
றேற்றத் தால்வருஞ் சிக்கன வுண்டேல்
மறிவுண் டேன்மறு மைப்பிறப் புண்டேல்
வாணாண் மேற்செல்லும் வஞ்சனை யுண்டேல்
பொறிவண் டியாழ்செய்யும் பொன்மலர்க் கொன்றை
பொன்போ லுஞ்சடை மேற்புனைந் தானை
அறிவுண் டேயுட லத்துயி ருண்டே
யாரூ ரானை மறக்கலு மாமே. 5

பொள்ள லிவ்வுட லைப்பொரு ளென்று
பொருளுஞ் சுற்றமும் போகமு மாகி
மெள்ள நின்றவர் செய்வன வெல்லாம்
வாரா மேதவிர்க் கும்விதி யானை
வள்ள லெந்தமக் கேதுணை யென்று
நாணா ளுமம ரர்தொழு தேத்தும்
அள்ள லங்கழ னிப்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே. 6

கரியா னையுரி கொண்டகை யானைக்
கண்ணின் மேலொரு கண்ணுடை யானை
வரியா னைவருத் தங்களை வானை
மறையா னைக்குறை மாமதி சூடற்
குரியா னையுல கத்துயிர்க் கெல்லா
மொளியா னையுகந் துள்கிநண் ணாதார்க்
கரியா னையடி யேற்கெளி யானை
யாரூ ரானை மறக்கலு மாமே. 7

வாளா நின்று தொழுமடி யார்கள்
வாழ்நா ளெப்பெறும் வார்த்தையைக் கேட்டும்
நாணா ளும்மல ரிட்டுவ ணங்கார்
நம்மையாள் கின்ற தன்மையை யோரார்
கேளா நான்கிடந் தேயுழைக் கின்றேன்
கிளைக்கெ லாந்துணை யாமெனக் கருதி
ஆளா வான்பலர் முன்பழைக் கின்றே
னாரூ ரானை மற்க்கலு மாமே. 8

விடக்கை யேபெருக் கிப்பல நாளும்
வேட்கை யாற்பட்ட வேதனை தன்னைக்
கடக்கி லேனெறி காணவு மாட்டேன்
கண்கு ழிந்திரப் பார்வையி லொன்றும்

இடக்கி லேன்பர வைத்திரைக் கங்கைச்
சடையா னையுமை யாளையோர் பாகத்
தடக்கி னானையந் தாமரைப் பொய்கை
யாரூ ரானை மறக்கலு மாமே.

ஒட்டி யாட்கொண்டு போயொளித் திட்ட
வுச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டி யைப்பக லையிரு டன்னைப்
பாவிப் பார்மனத் தூறுமத் தேனைக்
கட்டி யைக்கரும் பின்றெளி தன்னைக்
காத லாற்கடற் சூர்தடிந் திட்ட
செட்டி யப்பனைப் பட்ட னைச்செல்வ
வாரூ ரானை மறக்கலு மாமே. 10

ஒரு ரென்றுல கங்களுக் கெல்லா
முரைக்க லாம்பொரு ளாயுடன் கூடிக்
காரூ ருங்கமழ் கொன்றைநன் மாலை
முடியன் காரிகை காரண மாக
ஆரூ ரைம்மறத் தற்கரி யானை
யம்மான் றன்றிருப் பேர்கொண்ட தொண்டன்
ஆரூ ரன்னடி நாயுரை வல்லா
ரமர லோகத் திருப்பவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்





## திருவாரூர்

### பண் - செந்துருத்தி

திருச்சிற்றம்பலம்

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 1

விற்றுக் கொள்வீ ரொற்றி யல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகே ளென்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்டான் றரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே. 2

அன்றின் முட்டா தடையுஞ் சோலை யாரூ ரகத்தீரே
கன்று முட்டி யுண்ணச் சுரந்த காலி யவைபோல
என்று முட்டாப் பாடுமடியார் தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே. 3

துருத்தி யுறைவீர் பழனம் பதியார் சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே யுடையீர் மனமே யெனவேண்டா
அருத்தி யுடைய வடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால் வாழ்ந்து போதீரே. 4

செந்தண் பவளந் திகழுஞ் சோலை யிதுவோ திருவாரூர்
எந்த மடிகே ளிதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடு மடியார் தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ வென்றால் வாழ்ந்துபோதீரே. 5

தினைத்தா ளன்ன செங்கா னாரை சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போன் மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தா மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி யடியா ரிருந்தால் வாழ்ந்து போதீரே. 6

ஆயம் பேடை யடையுஞ் சோலை யாரூ ரகத்தீரே
ஏயெம் பெருமா னிதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே. 7

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோ மும்மை யிகழா தேத்துவோம்
பழிதா னாவ தறியீ ரடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே. 8

பேயோ டேனும் பிறிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ கருதிக் கொண்டக்கால்.
நாய்தான் போல நடுவே திரிந்து முமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் றிறவீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 9

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை யிதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டானம்மே யிடமாக் கொண்டீரே
இருந்து நின்றுங் கிடந்து மும்மை யிகழா தேத்துவோம்
வருந்தி வந்து முமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே. 10

காரூர் கண்டத் தெண்டோண் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே யடிப்பே ராரூரன்
பாரூ ரறிய வென்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே. 11

திருச்சிற்றம்பலம்

## திருவையாறு

பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பரவும்பரிசொன் றறியேனான் பண்டேயும்மைப் பயிலாதேன்
இரவும்பகலு நினைந்தாலு மெய்தநினைய மாட்டேனான்
சுரவிலருவி கமுகுண்ணத் தெங்கங்குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 1

எங்கேபோவே னுயிடினு மங்கேவந்தென் மனத்தீராய்ச்
சங்கையொன்று மின்றியே தலைநாள்கடைநா ளொக்கவே
கங்கைசடைமேற் கரந்தானே கலைமான்மறியுங் கனன்மழுவும்
தங்குத்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 2

மருவிப்பிரிய மாட்டேனான் வழிநின்றொழிந்தே னொழிகிலேன்
பருவிவிச்சி மலைச்சாரற் பட்டைகொண்டு பகடாடிக்
குருவியோப்பிக் கிளிகடிவார் குழன்மேன்மாலை கொண்டோட்டத்
தரவந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 3

பழகாநின்று பணிசெய்வார் பெற்றபயனொன் றறிகிலேன்
இகழா துமக்காட் பட்டோர்க்கு வேகபடமொன் றரைச்சார்த்தி
குழகாவாழைக் குலைத்தெங்கு கொணர்ந்துகரைமே லெறியவே
அழகார்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 4



பிழைத்தபிழையொன் றறியேனான் பிழையைத்தீரப் பணியாயே
மழைக்கணல்லார் குடைந்தாட மலையுநிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள்பிரசங் கலந்தெங்குங் கழனிமண்டிக் கையேறி
அழைக்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 5

கார்க்கொள்கொன்றை சடைமேலொன் றுடையாய்விடையாய் கையினான்
மூர்க்கர்புரமூன் றெரிசெய்தாய் முன்னீபின்னீ முதல்வனீ
வார்க்கொளருவிபலவாரி மணியுமுத்தும் பொன்னுங்கொண்
டார்க்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 6

மலைக்கண்மடவா ளொருபாலாய்ப் பற்றியுலகம் பலிதேர்வாய்
சிலைக்கொள்கணையா லெயிலெய்த செங்கண்விடையாய் தீர்த்தனீ
மலைக்கொளருவி பலவாரி மணியுமுத்தும் பொன்னுங்கொண்
டலைக்குந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 7

போழுமதியும் புனக்கொன்றை புனல்சேர்சென்னிப் புண்ணியா
சூழுமரவச் சுடர்ச்சோதீ யுன்னைத்தொழுவார் துயர்போக
வாழுமவர்க ளங்கங்கே வைத்தசிந்தை யுய்த்தாட்ட
ஆழுந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 8

கதிர்க்கொள்பசியே யொத்தேநான் கண்டேனும்மைக் காணாதேன்
எதிர்த்துநீந்த மாட்டேனா னெம்மான்றம்மான் றம்மானே
விதிர்த்துமேக மழைபொழிய வெள்ளம்பரந்து நுரைசிதறி
அதிர்க்குந்திரைக் காவிரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 9

கூசியடியா ரிருந்தாலுங் குணமொன்றில்லீர் குறிப்பிலீர்
தேசவேந்தன் றிருமாலு மலர்மேலயனுங் காண்கிலாந்
தேசமெங்குந் தெளித்தாடத் தெண்ணீ ரருவிகொணர்ந் தெங்கும்
வாசந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 10

கூடியடியா ரிருந்தாலுங் குணமொன்றில்லீர் குறிப்பிலீர்
ஊடியிருந்து முணர்கிலே னும்மைத்தொண்ட னூரனேன்.
தேடியெங்குங் காண்கிலேன் றிருவாரூரே சிந்திப்பன்
ஆடுந்திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய வடிகளோ. 11

திருச்சிற்றம்பலம்

## திருத்தொண்டத்தொகை

### பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்
றிருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தர்க் கடியே
னேனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனன்மங்கை யானாயர்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 2

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியேன்



ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 4

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியே
னாட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியே
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 6

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேனம்பி முனையடுவார்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே. 8

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னாரூரி லாம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவ ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
றிருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்தா ரடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுங் காளே. 10

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே. 11

திருச்சிற்றம்பலம்





## திருத்துறையூர்

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மலையா ரருவித் திரண்மா மணியுந்திக்
குலையாரக் கொணர்ந்தெற்றி யொர்பெண்ணை வடபால்
கலையா ரல்குற் கன்னியரா டுந்துறையூர்த்
தலைவா உனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

மத்தம் மதயானை யின்வெண் மருப்புந்தி
முத்தங் கொணர்ந்தெற்றி யொர்பெண்ணை வடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
அத்தா உனைவேண்டிக் கொள்வேன் றவநெறியே.

## திருநொடித்தான்மலை

பண்—பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தா னதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தா னொடித்தான்மலை யுத்தமனே. 1

ஆனை யுரித்தபகை யடியேனொடு மீளக்கொலோ
ஊனை யுயிர்வெருட்டி யொள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை யேறவைக்க
ஆனை யருள்புரிந்தா னொடித்தான்மலை யுத்தமனே. 2

மந்திர மொன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களாற் றுரிசேசெயுந் தொண்டனெனை
அந்தர மால்விசும்பி லழகானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை யுத்தமனே. 3

வாழ்வை யுகந்தநெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப்பட்
டாழ முகந்தவென்னை யதுமாற்றி யமரரெல்லாம்
சூழ வருள்புரிந்து தொண்டனேன் பரமல்லதொரு
வேழ மருள்புரிந்தா னொடித்தான்மலை யுத்தமனே. 4

மண்ணுல கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுத லொண்டனேனின்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தா னொடித்தான்மலை யுத்தமனே. 5

அஞ்சினை யொன்றிநின்று வலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை யென்மனமே வைகிவானநன் னாடர்முன்னே
துஞ்சுதன் மாற்றுவித்துத் தொண்டனேன்பர மல்லதொரு
வெஞ்சின வானைதந்தா னொடித்தான்மலை யுத்தமனே. 6

நிலைகெட விண்ணதிர நிலமெங்கு மதிர்ந்தசைய
மலையிடை யானையேறி வழியேவரு வேனெதிரே
அலைகட லாலரையன் னலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ண நொடித்தான்மலை யுத்தமனே. 7

அரவொலி யாகமங்க ளறிவாரறி தோத்திரங்கள்
விரவிய வேதவொலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தா னொடித்தான்மலை யுத்தமனே. 8

இந்திரன் மால்பிரமன் னெழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளவென்னை மதயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென வெம்பெருமான்
நந்தம ரூரனென்று னொடித்தான்மலை யுத்தமனே. 9

ஊழிதொ றூழிமுற்று முயர்பொன்னொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல வூரன்சொன்ன
ஏழிசை யின்றமிழா லிசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா வஞ்சையப்பர்க் கறிவிப்பதே. 10

திருச்சிற்றம்பலம்



மாணிக்கவாசக சுவாமிகள்
திருவாசகச் சிறப்பு (திருவாசகம்)

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்

## சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்விளங் கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்

ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தானிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈத்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே



கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையிற் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.



உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள்

திருப்பெருந்துறையில் அருளிய

# திருப்பள்ளி எழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே ;
ஏற்றுயர் கொடியுடையாய்எனை! உடையாய்!
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே? 1

அருணன் இந் திரன் திசை அணுகினன் ; இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ ; நயனக்
கடிமலர் மலர ; மற்றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன ; இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே !
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகடலே! பள்ளி எழுந்தருளாயே! 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின ; இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ ! நற் செறிகழற் றாளிணை காட்டாய் ;
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாய் ! எமக் கெளியாய் !
எம்பெருமான் ! பள்ளி எழுந்தரு ளாயே! 3



இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால் ;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால் !
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால் ;
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர், ஒருபால் ;
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே !
என்னையும் ஆண்டுகொண் (டு) இன்னருள் புரியும்
எம்பெரு மான் ! பள்ளி எழுந்தரு ளாயே ! 4

பூதங்க டோறுநின் றாய் எனின் அல்லால்
"போக்கிலன் வரவிலன்" என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம் உனைக் கண்டறிவாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா !
சிந்தனைக் கும் அரி யாய் ! எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் ! பள்ளி எழுந்தரு ளாயே! 5

பப்பற வீட்டிருந் துணரும் நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார் அணங் கின்மண வாளா!
செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே! 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்!
இதுஅவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்! திருப் பெருந்துறை மன்னா !
எதுஎமைப் பணிகொளும் (ஆறு)? அது கேட்போம்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே! 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற்று அறிவார்?
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே !
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்
ஆரமு தே ! பள்ளி எழுந்தரு ளாயே ! 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே ! உன தொழும்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச் செய்தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி அடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமுதே ! கரும்பே! விரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான் ! பள்ளி எழுந்தரு ளாயே! 9

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம் அவ மேஇந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய் ! திரு மாலாம் ;
அவன் விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே ! பள்ளி எழுந்தருளாயே ! 10





சிவமயம்

# திருவெம்பாவை

(சக்தியை வியந்து – மாணிக்கவாசக சுவாமிகள்)
திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதேவளருதியோ வன்செவியோ நின்செவிதான் ?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விமமிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
எதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே !
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்! 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் ? நேரிழையீர்!
சீசி இவையும் சிலவோ? விளையாடி
ஏசு மிடம்ஈதோ? – விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்? 2

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ! ஈசன் பழ அடியீர் ! பாங்குடையீர் !
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம்அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்! 3

ஒள்நித் திலநகையாய் இன்னும் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்! 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்! 5

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய்! 6

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என் அரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோம்
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்! 7



கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்! 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்றஉன்சீரடியோம்
உன்அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்! 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர்? ஏதவன்பேர்?ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்? 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயாவழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்! 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச் சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கழல்கள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்ணடார்ப்பப்
பூர்த்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்! 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 13

காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்! 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றேநம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம்ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 15



முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையான்
என்னத் திகழ்தெம்மை ஆளுடையான் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலப்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்! 16

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்நம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்! 17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடேலோர்எம்பாவாய்!18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்! 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகாமம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்! 20

# திருப்பொற்சுண்ணம்

## திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம் பூ மாலைத்தூக்கி
முளைக்குடந்த தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமகளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 1

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்(கு)
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப
பாசவினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 4



அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழந்துபொற் சுண்ணம் இடித்துநாமே 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமாலை அன்னகோவுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதரு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கையற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 10

மாடு நாகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந்த தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம்இடித்துநாமே 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடதைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து) எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 13



அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே 18

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம்பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினார்க்(கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே 20

**திருச்சிற்றம்பலம்**

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 17



# பட்டினத்துப் பிள்ளையார் பாடல்

## திரு ஏகம்பம்

எத்தனைஊர் எத்தனைவீடு எத்தனைதாய் பெற்றவர்கள்
எத்தனைபேர் இட்டுஅழைக்க ஏன்என்றேன் – நித்தம்
எனக்குக் களை ஆற்றாய் ஏகம்பா கம்பா
உனக்குத் திருவிளையாட்டோ

## திருக்குற்றாலம்

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலஉண் கடைவாய் படும்முன்னே – மேல்விழுந்தே
உற்றார் அழும்முன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலந் தானையே கூறு.

## பொது

விட்டுவிடப் போகுதுஉயிர் விட்டஉட னேஉடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் -பட்டதுபட்டு
எந்நேர மும்சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம்

ஆவியோடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவிஎன்று நாமம் படையாதே – மேவியசீர்
வித்தார மும்கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

ஒன்பதுவாய்த்தோல்பைக்கு ஒருநாளைப் போலவே
அன்புவைத்து நெஞ்சே அலைந்தாயே – வன்கழுக்கள்
தத்தித்தக் திச்செட்டை தட்டிக்கட் டிப்பிட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு.

எத்தனைநாள் கூடி எடுத்த சரீரம்இவை
அத்தனையும் மண்தின்பது அல்லவோ - வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பகல் அற்றஇடம்
மேலைக் குடிஇருப்போ மே.

எத்தனைபேர் நட்டகுழி எத்தனைபேர் தொட்டமுலை
எத்தனைபேர் பற்றி இழுத்தஇதழ் - நித்தநித்தம்
பொய்அடா பேசும் புலைமா தரைநீக்கி
உய்அடா உய்அடா உய்.

இருப்பதுபொய் போவதுமெய் என்றுஎண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினைஉன் னாதே - பருத்ததொந்தி
நம்மதுஎன்று நாம்இருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மது என்று தாம்இருக்கும் தான்.

## அன்னையாருக்கு இறுதிக்கடன் இயற்றும் பொழுது பாடியவை

ஐயிரண்டு திங்களா அங்கம்எலாம் நொந்துபெற்றுப்
பையல்என்ற போதே பரிந்து எடுத்துச் - செய்யஇரு
கைப்புறத்தல் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்துஎன்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.



நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்துஎடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டு என்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

அரிசியோ நான்இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் - உருசிஉள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே எனஅழைத்த வாய்க்கு.

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு.

### விருத்தம்

முன்னை இட்டதீ முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ தென்இ லங்கையில்
அன்னை இட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே.

### வெண்பா

வேகுதே தீஅதனில் வெந்துபொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்துஎடுத்த கை.

வெந்தாளோ சோணகிசி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம்கிடந்தென்
தன்னையே ஈன்றுஎடுத்த தாய்.

வீற்றிருந் தாள் அன்னைவீதி தனில் இருந்தாள்
நேற்றுஇருந்தாள் இன்றுவெந்து நீறுஆனாள்-பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதுஎன்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்

## உடல் கூற்று வண்ணம்
## (இசை வாய்ப்பாடு)

தனதனதான தனதனதான
 தந்ததனந்தன தந்ததனந்த
தனனதனந்த தனனதனந்த
 தானனதானன தானனதந்த
தந்ததனதான தனதானனா.

ஒருமடமாதும் ஒருவனும் ஆகி
 இன்பசுகம்தரும் அன்புபொருந்தி
உணர்வுகலங்கி ஒழுகியவிந்து
 ஊறுசுரோணித மீது கலந்து

பனியில் ஓர்பாதி சிறுதுளிமாது
 பண்டியில்வந்துபு குந்துதிரண்டு
பதுமம் அரும்பு கமடம்இதென்று
 பார்வைமெய்வாய்செவி கால்கைகள் என்ற

உருவமும்ஆகி உயிர்வளர்மாதம்
 ஒன்பதும்ஒன்றும் நிறைந்துமடந்தை
உதரம்அகன்று புவியில்விழுந்து
 யோகமும்வாரமும் நாளும் அறிந்து

மகளிர்கள்சேனை தரஅணைஆடை
 மண்படஉந்திஉ தைந்துகவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
 ஓர் அறிவுஈர் அறிவு ஆகிவளர்ந்து



ஒளிநகைஊறல் இதழ்மடவாரும்
 உவந்துமுகந்திட வந்துதவழந்து
மடியில்இருந்து மழலைமொழிந்து
 வாஇருபோஎன நாமம்விளம்ப

உடைமணிஆடை அரைவடம்ஆட
 உண்பவர்தின்பவர் தங்களொடு உண்டு
தெருவில்இருந்து புழுதிஅளைந்து
 தேடியபாலரொடு ஓடிநடந்து
அஞ்சுவயதாகி விளையாடியே

உயர்தருஞான குருஉபதேச
 முந்தமிழின்கலை யும்கரைகண்டு
வளர்பிறைஎன்று பலரும்விளம்ப
 வாழ்பதினாறுபி ராயமும்வந்து

மயிர்முடிகோதி அறுபதநீல
 வண்டு இமிர்தண்தொடை கொண்டைபுனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து
 மாகதர்போகதர் கூடிவணங்க

மதனசொரூபன் இவன்எனமோக
 மங்கையர்கண்டும ருண்டுதிரண்டு
வரிவிழிகொண்டு சுழியஎறிந்து
 மாமயில்போல்அவர் போவதுகண்டு

மனதுபொறாமல் அவர்பிறகுஓடி
 மங்கலசெங்கல சந்திகழ்கொங்கை
மருவமயங்கி இதழ்அமுதுண்டு
 தேடியமாமுதல் சேரவழங்கி

ஒருமுதல்ஆகி முதுபொருளாய்இ
 ருந்ததனங்களும் வம்பில்இழந்து
மதனசுகந்த விதனம்இதுஎன்று
 வாலிபகோலமும் வேறுபிரிந்து

வளமையும்மாறி இளமையுமாறி
வன்பல்விழுந்துஇரு கண்கள்இருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதம் அடைந்து
செங்கையினில் ஓர்த டியும் ஆகியே

வருவது போவது ஒருமுதுகூனு
மந்திஎனும்படி குந்திநடந்து
மதியும்அழிந்து செவிதிமிர்வந்து
வாய்அறியாமல்வி டாமல்மொழிந்து

துயில்வரும்நேரம் இருமல்பொறாது
தொண்டையும்நெஞ்சும் உலர்ந்துவறண்டு
துகிலும்இழந்து சுணையும்அழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு

கலியுகம்மீதில் இவர்மரியாதை
கண்டிடும்என்பவர் சஞ்சலம்மிஞ்ச
கலகலஎன்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து

தெளிவும்இராமல் உரைதடுமாறி
சிந்தையும்நெஞ்சும்உ லைந்துமருண்டு
திடமும் அழிந்து மிகவும்அலைந்து
தேறிநல்ஆதரவு ஏதுஎனநொந்து

மறையவன்வேதன் எழுதியவாறு
வந்ததுகண்டமும் என்றுதெளிந்து
இனியென கண்டம் இனிஎனதொந்தம்
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற



கடன்முறைபேசும் எனஉரைநாவு
தங்கிவிழுந்துகைகொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி ஒழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமும் நின்று
நெஞ்சுதடுமாறி வரும்நேரமே

வளர்பிறைபோல எயிரும்உரோம
மும்சடையும்சிறு குஞ்சியும்விஞ்ச
மனதும்இருண்ட வடிவும்இலங்க
மாமலைபோல்யம தூதர்கள் வந்து

வலைகொடுவீசி உயிர்கொடுபோக
மைந்தரும்வந்துகு னிந்தழநொந்து
மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரே இவர் காலம் அறிந்து

பழையவர்காணும் எனும்அயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்தர்
இடும்எனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும்என்று

பலரையும் ஏவி முதியவர்தாம்இ
ருந்தசவம்கழு வுஞ்சிலர்என்று
பணிதுகில் தொங்கல் களபம்அணிந்து
பாவகமேசெய்து நாறும்உடம்பை

வரிசைகெடாமல் எடும்எனஓடி
வந்துஇளமைந்தர்கு னிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலை அடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து

விறகுஇடைமூடி அழல்கொடுபோட
வெந்துவிழுந்துமு றிந்துநிணங்கள்
உருகிஎலும்பு கருகிஅடங்கி
ஓர்பிடிநீறும்இ லாத உடம்பை
நம்பும்அடியேனை இனிஆளுமே.

ஓம்

# கந்தர் சஷ்டி கவசம்

## திருப்பரங்குன்றுறை தீரன்
## முதலாவது கவசம்

### காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

துதிப்போர்க்கு வல்வினை போம், துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்- கதித்(து) ஓங்கும்
நிட்டையும் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா

குறுக்குத் துறையுறை குமரனே அரனே
இருக்குள் குருபரா ஏரகப் பொருளே
வையா புரியில் மகிழ்ந்துவாழ் பவனே

ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோ நமோ
ஐயா குமரா அருளே நமோநமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ

பழநியங் கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடைய முதல்வன் மதலாய் நமோநமோ
விராலி மலையுறை விமலா நமோநமோ

மராமரம் துளைத்தோன் மருகா நமோநமோ
சூரசம் காரா துரையே நமோநமோ
வீரவே லேந்தும் வேளே நமோநமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோநமோ



கண்களீ ராறுடைக் கந்தா நமோநமோ
கோழிக் கொடியிடைக் கோவே நமோநமோ
ஆழ்சூழ் செந்தில் அமர்ந்தாய் நமோநமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம் ரீம்
வவவ வவவ வா ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூழ்
வவவ வவவ கௌம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருக நிஷ களங்கனே வருக
தூயென நின்னிரு தாள்பணிந் தேன்எனைச்
சேயேனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினமும் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வராமல் தடுத்து
நல்ல மனதுடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க! மகிழ்ந்துநீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா
நந்தன் மருகா நாரணி சேயே
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமி நாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்
தவக்கதிர் காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிகரில்லாத் தலங்களைக் கொண்டு
சன்னிதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக் (கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துக்கள் ஆடிய சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொரு ளோனே!
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே

வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரியயன் அம்பிகை லட்சுமி
வாணியுடனே வரையுமாக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத் துள்ள புண்ணிய தீர்த்தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத்தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிஷ்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணெய்போல் எழிலுடைய உன்னை
அல்லும் பகலும் ஆசாரத்துடன்
சல்லாப மாய் உனைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள் வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே!
சரணம் சரணம் சரவண பவஓம்
அரன் மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.





ஓம்

# கந்தர் சஷ்டி கவசம்

## செந்தில் மேய கந்தவேள் இரண்டாவது கவசம்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்;
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்

குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈரறு செவியில் இலகு குண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேவல் காக்க



கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம் பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்ட குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க.
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட

இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி ஊருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி



பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொழி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தாகுகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நாஇருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரஷி அன்னமுஞ் சொர்ணமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவஜம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனைப் பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை


வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்!
விழியால் காண வெறிண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடி பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி

அறிந்து, எனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்து உணவு ஆகச்
சூரபத்தமாவைத் துணித்தகையதனால்
இருபத்தெழுவர்க்கு உவந்து அமுது அளித்த
குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி!
என்னைத் தடுத்து ஆட்கொள்ள என்றனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாதிபதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி



இடும்பா யுதனே, இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனகசபைக்கு ஓர் அரசே!
மயில் நடனம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!



ஓம்

# கந்தர் சஷ்டி கவசம்

## பழநிப் பதியொளிர் பரமன்

## மூன்றாவது கவசம்

திருவா வினன்குடி சிறக்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணா சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பராமசு வரிக்குப் பாலா தயாபரா
வரமனெக்(கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டாயிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்

வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்ட நிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்(கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முறுகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்

கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வெற்றி

விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனை கொடுஞ்சிறை வைத்து
உறுபொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
சுருதிமெய் யோகம் சொல்லிய(து) ஒருமுகம்
அருள்பெறு மயில்மீ(து) அமர்ந்த(து) ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய(து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்



சூரனை வேலால் துணித்த(து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோ நம
பொருட்செந்தில் அம்பதி புரப்பாய் நமோநம
ஏரகம் தனில் வாழ் இறைவா நமோநம

கூரகம் ஆவினன் குடியாய் நமோநம
சர்வசங் கரிக்குத் தனயா நமோ
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோநம
எல்லாக் கிரிக்கும் இறைவா நமோநம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே

மூலவட்டத்தில் முளைத்தெழும் சோதியை
சால முக்கோணத் தந்தமுச் சத்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி

நாற்கோ ணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்

முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன் மேல்
ஆகாச வட்ட(து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் கட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி

மிக்கமாய்க் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து சீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியன் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்(டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறுமுகமாய் அகத்துள்ளே நின்று

வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளை யாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரை திரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கணமாக
நினைத்த படி என் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க்(கு) இறங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறு தாரத்(து) ஆறுமுகமும்

மாறா திருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணம்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்
வழுத்தும் என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியாக்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிரம் சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்கு (கு) உதவி



வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்ல உன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அனேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும் பில்லி வஞ்சனை
பேதாளம் துர்க்கை பிடாரீ நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங் (கு) உருட்டி நொறுக்கிச்
சூலத்தாற் குத்தித் தூளுதா ளுருவி
வேலா யுதத்தால் வீசிப் பருகி
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவிஅக் கினியாத்தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முன்னே நின்று
வாகனத்துடன் என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடணம்
வம்பதாம் பேதுனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயிர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருபணி அட்சரம்
உந்தன் விபூதி யுடனே சபித்து
கந்தன் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்ததம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்காரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

ஓம்

முருகா

# கந்தர் சஷ்டி கவசம்

## திருவேரகத்துறை பெருமான்

## நான்காவது கவசம்

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த மனமுறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆண்மை நண்ணிடா (து) என்னைக்
காணநீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமார
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
"ஏகாட் சரமாய்" எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
"துவியட் சரத்தால்" தொல்லுல(கு) எல்லாம்
அதிசயமாக அமைந்தவா போற்றி
"திரியட் சரத்தால்" சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மையுற்றவனே
"சதுரட் சரத்தால்" சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
"பஞ்சாட் சரத்தால்" பரமன் உருவதாய்த்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அகன்ற மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே



அரனயன வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும் ஆ யுதத்தால்
தரங்குலைத் (து) ஓடத் தாரகா சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவசே னாதிப
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகளருள் ஈசன் புதல்வா
துட்டசம் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர

சைவம் வைணவம் சமரச மாக
தைவமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்ரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை, சொக்கலும் சயமும்
மூலரோ கங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டிக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

ஓம்

# கந்தர் சஷ்டி கவசம்

## குன்றுதோறாடும் குமரவேள்

## ஐந்தாவது கவசம்

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
புள்ளி மயிலேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறுமுகவா
பண்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா
ஆராறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா

ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண்ணீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிரபைப்போல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநாயகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கம் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈசுவரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈசுரன் வடிவை மிகக்கண் டனுதினம்



கையால் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே
ஐயா! குமரா!அப்பனே! என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துத்
கார்த்திகேயா எனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென் (று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள் சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவவெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலக்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீ தாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்
வாயில்கள் மோழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலம் நவரோ மபந்தியும்
மார்பில்சவ்வாது வாடை குபீரென
புழுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கத் தூரியும்

வலம்புரிச் சங்கொளி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
மூருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பயிரவர் ஆனந்தமாட
துஷ்ட மிகுஞ்சூளிகள் சூழ்திசைகாக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்ன
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லட்சுமி அம்பிகை பார்வதி

கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன் நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் செயசெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிச்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக



பூதம் அடிபணிந்தேத்த வேதாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்து கொண் டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடைவிடாமல் உன் ஏவலர் போற்றச்
சிவனடியார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன் மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீர மயிலேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற சூலத்தை அறுத்துச் சயித்து
விடவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சய்த தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன்குடி திருவேரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை
கண்ணிய மாவூற்று கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினா லுலகத்தினிலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந் (து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குன் வாழ்க.
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்டமுடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிகமாய் எனக்(கு) அருள் சண்முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

ஓம்

# கந்தர் சஷ்டி கவசம்

## பழமுதிர் சோலை கதிரோன்

### ஆறாவது கவசம்

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் ணவ்வும் பழமுதிர்சோலையில்
தவ்விய ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய் சென்றங் (கு)
அஞ்சலி செய்தவள் அமுதம் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடைய வீரவாகுவோ(டு) ஒன்பதுன்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிரதாயா சண்முக வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ்வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப்படவே



மமதையாய் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்க வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண்டிதனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமகளுடனே
அறுவரோர் அம்சமாம் அரக்கரை வெல்ல
அறுமுகத்துடன் அவதரித் தோனே
சிங்க முகாசூரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்களோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவர் வமரர்கள் தமக்குச்
சேனாதிபதியாய்த் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங் (கு)
இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்கு குரு தேசிகனே
தேன்பொழி பழநித் தேவ குமாரா
கண்பார்த் (து) எனையாள் கார்த்திகேயா என்
கஷ்டநிஷ்டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட்சுமிவாழ் அருளெனக் (கு) உதவி
இட்டமாய் என் முன்னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருண கிரிதனக் (கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவலயத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசம் தான் செபிப் போரைச்
சிட்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த்திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் தமிழ்தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.

**(ஆறு கவசங்களும் மற்றுப் பெற்றன)**

திருச்சிற்றம்பலம்

# காரைக்கால் அம்மையார் அருளிச்செய்த
# திரு ஆலங்காட்டு மூத்த திருப்பதிகம்

பண்—நட்டபாடை

## திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பு எழுந்து
குண்டுகண் வெண்பல் குழிவயிற்றுப்
பங்கி சிவந்து இருபல்கள் நீண்டு
பரடு உயர்நீள கணைக்கால் ஒர்பெண் பேய்
தங்கி அலறி உலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத்திசையும் வீசி
அங்கம் குளிர்ந்து அனல் ஆடும் எங்கள்
அப்பன் இடம் திருஆலங்காடே.

கள்ளிக் கவட்டு இடைக் காலை நீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்து மையை
விள்ள எழுதி வெடுவெடு என்ன
நக்கு வெருண்டு விலங்கு பார்த்துத்

துள்ளிச் சுடலைச் சுடுபிணம்தீச்
சுட்டிட முற்றும் சுளிந்து பூழ்திப்
அள்ளி அவிக்க நின்று ஆடும் எங்கள்
அப்பன் இடம் திருஆலங்காடே

வாகை விரிந்து வெண்நெற்று ஒலிப்ப
மயங்கு இருள் கூர் நடுநாளை ஆங்கே
கூகையோடு ஆண்டலை பாட ஆந்தை
கோடு அதன்மேல் குதித்து ஓட வீசி
ஈகை படர் தொடர்கள்ளி நீழல்
ஈமம் இடு சுடுகாட்டு அகத்தே
ஆகம் குளிர்ந்து அனல் ஆடும் எங்கள்
அப்பன் இடம் திரு ஆலங்காடே.



குண்டில் ஓமம்குழிச் சோற்றை வாங்கிக்
குறுநரி தினன அதனை முன்னே
கண்டி லோம் என்று கனன்று பேய்கள்
கை அடித்து ஓடு இடுகாடு அரங்கா
மண்டலம் நின்று அங்கு உளாளம் இட்டு
வாதித்து வீசி எடுத்த பாதம்
அண்டம் உற நிமிர்ந்து ஆடும் எங்கள்
அப்பன் இடம் திரு ஆலங்காடே.

விழுது நிணத்தை விழுங்கி விட்டு
வெண் தலைமாலை விரவப் பூட்டிக்
கழுது தன்பிள்ளையைக் காளி என்று
பேர் இட்டுச் சீர் உடைத்தா வளர்த்துப்
புழுதி துடைத்து முலை கொடுத்துப்
போயின தாயை வரவு காணாது
அழுது உறங்கும் புறங்காட்டில் ஆடும்
அப்பன் இடம் திரு ஆலங்காடே.

பட்டஅடி நெட்டு உகிர்ப் பாறுகால் பேய்
பருந்தொடு கூகை பகண்டை ஆந்தை
குட்டி இட முட்டை கூகை பேய்கள்
குறுநரி சென்று அணங்கு ஆடுகாட்டில்
பிட்டடித்துப் புறங்காட்டில் இட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டி ஆங்கே
அட்டமே பாய நின்று ஆடும் எங்கள்
அப்பன் இடம் திரு ஆலங்காடே.

சுழலும் அயல்விழிக் கொள்ளிவாய்ப் பேய்
சூழ்ந்து துணங்கையிட்டு ஓடி ஆடித்
தழலுள் எரியும் பிணத்தை வாங்கித்
தான் தடி தின்று அணங்கு ஆடுகாட்டி
கழல் ஒலி ஓசைச் சிலம்பு ஒலிப்பக்
கால் உயர் வட்டணை இட்டு நட்டம்
அழல் உமிழ்ந்து ஓரி கதிக்க ஆடும்
அப்பன் இடம் திரு ஆலங்காடே.

நாடும் நகரும் திரிந்து சென்று
நன்னெறி நாடி நயந்தவரை
முடி முதுபிணத்து இட்ட மாடே
முன்னிய பேய்க்கணம் சூழச்சூழக்
காடும் கடலும் மலையும் மண்ணும்
விண்ணும் சுழல அனல் கை ஏந்தி
ஆடும் அரவம் புயங்கன் எங்கள்
அப்பன் இடம் திரு ஆலங்காடே.

துத்தம் கைக்கிள்ளை விளரி தாரம்
உழை இனி ஓசை பண் கெழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்
தமருகம் குடமுழா மொந்தை வாசித்து
அத்தனை விரவினோடு ஆடும் எங்கள்
அப்பன் இடம் திரு ஆலங்காடே.

புந்தி கலங்கி மதி மயங்கி
இறந்தவரைப் புறங்காட்டில் இட்டுச்
சந்தியில் வைத்துக் கடமை செய்து
தக்கவர் இட்ட செந்தீ விளக்கா
முந்தி அமரர் முழவின் ஓசை
திசை கதுவச் சிலம்பு ஆர்க்க ஆர்க்க
அந்தியில் மாநடம் ஆடும் எங்கள்
அப்பன் இடம் திரு ஆலங்காடே.

ஒப்பனை இல்ல வன்பேய்கள் கூடி
ஒன்றினை ஒன்று அடித்து ஒக்கலித்துப்
பப்பினை இட்டுப் பகண்டை ஆடப்
பாடு இருந்து அந்நரி யாழ் அமைப்ப
அப்பனை அணி திரு ஆலங்காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக்கால் பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்து இன்பம் எய்துவாரே.



# திருவருட் பா

நான் கொண்ட விரதம்நின் அடிஅலால் பிறர்தம்மை
நாடாமை ஆகும் இந்த
நல்விரத மாம்கனியை இன்மைஎனும் ஒருதுட்ட
நாய் வந்து கவ்வி அந்தோ
தான்கொண்டு போவதினி என்செய்வேன் என்செய்வேன்
தளராமை என்னும் ஒருகைத்
தடிகொண் டடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
தன்முகம் பார்த்தருளுவாய்
வான்கொண்ட தெள்அமுத வாரியே மிகுகருணை
மழையே மழைக்கொண்டலே
வள்ளலே என் இருகண் மணியே என் இன்பமே
மயில் ஏறு மாணிக்கமே
தான்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவுவேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

திருஓங்கு புண்ணியச் செயல் ஓங்கி அன்பருள்
திறலோங்கு செல்வம் ஓங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்
திகழ்ந்தோங்க அருள் கொடுத்து
மருஓங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க
வளர்கருணை மயம்ஓங்கி ஓர்
வரம்ஓங்கு தெள்அமுத வயம்ஓங்கி ஆனந்த
வடிவாகி ஓங்கிஞான
உருஓங்கும் உணர்வின்நிறை ஒளிஓங்கி ஓங்கும்மயில்
ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்
உறவோங்கும் நின்பதம்என் உளம்ஓங்கி வளம்ஓங்க
உய்கின்ற நாள் எந்தநாள்
தருஓங்கு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

---

நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும் உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிஉண்டு நிலையும்உண்டு
ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும் உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம் உறும்
உளம்உண்டு வளமும்உண்டு
தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும் உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயில் அரசே
தார்உண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.



உ

# சகல கலாவல்லிமாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
  மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
  வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
  டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
  சகல கலாவல்லியே.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

# வெள்ளைத் தாமரை

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,
  வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை யின்பம் குலவு கவிதை
  கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்;
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
  ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்;
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
  கருணை வாசகத் துட்பொருளாவாள்.
(வெள்ளைத்)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்.
  மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
  கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்;
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
  குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
  இன்ப மேலடி வாகிடப் பெற்றாள்.
(வெள்ளைத்)

வஞ்ச மற்ற தொழில் புரிந்துண்டு
  வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்;
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்,
  வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்,
  வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
  தரணி மீதறி வாகிய தெய்வம்.
(வெள்ளைத்)





திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய் — தலை
  மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
  தலையே நீவணங்காய்

கண்காள் காண்மின்களோ — கடல்
  நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
  கண்காள் காண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ — சிவன்
  எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்றிற மெப்போதும்
  செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீமுரலாய் — முது
  காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
  மூக்கே நீமுரலாய்.

வாயே வாழ்த்துகண்டாய் — மத
  யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
  வாயே வாழ்த்துகண்டாய்,
நெஞ்சே நீநினையாய் — நிமிர்
  புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
  நெஞ்சே நீநினையாய்.

கைகாள் கூப்பித்தொழீர் — கடி
  மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
  கைகாள் கூப்பித்தொழீர்.

ஆக்கை யாற்பயனென் — அரன்
  கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்
  ஆக்கையாற் பயனென்.

காலக ளாற்பயனென் — கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்களாற் பயனென்.

உற்ற ராருளரோ — உயிர்
கொண்டு போம்பொழுது
குற்ற லத்துறை கூத்தனல் லானமக்கு
உற்ற ராருளரோ.

இறுமாந் திருப்பன்கொலோ — ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந் திருப்பன்கொலோ.

தேடிக் கண்டுகொண்டேன் — திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்.

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே.

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை யேந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையு மென்மேற் றர வறுத்தா
யவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.



## தேவாரம்

நீறுமெய்பூசி நிறைசடைதாழ
நெற்றிக்கண் ணாலுற்றுநோக்கி
ஆறதுசூடி யாடரவாட்டி
யைவிரற் கோவணவாடை
பாறருமேனியர் பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறிய ரேழையைவாட
விடர்செய்வதோ விவரீடே.

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
யாதி யையம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடையானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்
திருவடிமே லலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்ட மாடி
நான்முகனு மிந்திரனுமாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேரா
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொழாதே
உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி
உழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலு மாரூ ரரைக்
கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வனேனே.

## திருவாசகம்

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்(கு)
அறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே.

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணலெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேனான் உடையானே அடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா றார்பெறுவார் அச்சோவே.

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசுமறுத்(து)
அந்தமெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.





## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே?
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்(து) உள்ளம்அள் ளூறும்
தொண்டருக்(கு) எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

பாடலங் காரப் பாசில்கா(சு) அருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத்(து) எம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் அமுதைத்
திருவீழி மிழலையூ ராளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற்(கு) எவ்விடத் தேனே.

வைத்த பாதங்கள் மாலவன்
காண்கிலன் ; மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந்(து) இன்னமும்
துதிக்கின்றார் எழில்மறை அவற்றாலே
செய்த்தலைக் கமலம் மலர்ந்தோங்கிய

தில்லை யம்பலத் தானைப்
பத்தியாற் சென்று கண்டிட
என்மனம் பதைபதைப் பொழியாதே.

## திருப்பல்லாண்டு

**ஆரார் வந்தார் ? அமரர்**
**குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்**
**நாரா யணனொடு நான்முகன்**
**அங்கி இரவியும் இந்திரனும்**
**தேரார் வீதியில் தேவர்**
**குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து**
**பாரார் தொல்புகழ் பாடியும்**
**ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.**

**திருச்சிற்றம்பலம்.**

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

**தாதையைத் தாளற வீசிய**
**சண்டிக்கு மண்டத் தொடுமுடனே**
**பூதலத் தோரும் வணங்கப்பொற்**
**கோயிலும் போனகமு மருளிச்**
**சோதி மணிமுடித் தாமமு**
**நாமமுந் தொண்டர்க்கு நாயகமும்**
**பாதசத் துக்குப் பரிசுவைத்**
**தானுக்கே பல்லாண்டு கூறுதமே.**



# பத்தாந் திருமுறை

## திருமூல நாயனார் அருளிச் செய்த

# திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க் கின்னுரை தானே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே.

**ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்**
**சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.**

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
  அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக்குணம் ஒருமூன்றும்
  திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
  எல்லையில் தனிப்பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
  மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவயற்பு கலித்திரு ஞானசம்பந்தர்
பாதமலர்தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல்
  போற்றி போற்றி.

ஆதியாய் நடவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்குந் தில்லைப் பொது நடம்
  போற்றி போற்றி

எடுக்குமாக் கதையின் தமிழ்ச்செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திட
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்.



## திருப்புகழ்

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
  தவமுறை தியானம்வைக்க   அறியாத
சடகசட மூடமட்டி பழவினையி லேசனித்த
  தமியன்மிடி யால் மயக்க   முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையிவ் வேளைசெப்பு
  கயிலைமலை நாதர்பெற்ற   குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
  கமழுமண மார்கடப்ப   மணிவோனே
தருணமிதை யாமிகுந்த கனமதுறு நீள்சவுக்ய
  சகலசெல்வ யோகமிக்க   பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
  தவிபுரிய வேணுநெய்த்த   வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
  அரியதமிழ் தானளித்த   மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
  அழக திரு வேரகத்தின்   முருகோனே

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
  இலங்கு நூலும் புலியதனாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
  அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உகந்தசூரன் கிளையுடன் வேரற முனிவோனே
  உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
  அமைந்த வேலும் புயமிசைமேவிய பெருமானே!

திருச்சிற்றம்பலம்

காரணமதாக வந்து புவிமீதே
  காலனணுகாதிசைந்து கதிகாண
நாரணனும் வேதம் முன்பு தெரியாத
  ஞான நடமே புரிந்து வருவாயே
ஆரமுதமான நந்தி மணவாளா
  ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர்கிளை மாளவென்ற கதிர்வேலா
  சோலைமலை மேவி நின்ற
    பெருமானே.

## திருப்புகழ்
(விநாயகர் துதி)

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக — னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை — கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய — மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு — பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய — முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த — அதிதீரா
அத்து யரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை — யிபமாகி
அக்குற மகளுடனச்சிறு முருகனை
அக்கண மணமருள் — பெருமாளே.

### பழமுதிர்சோலை

அகரமு மாகி யதிபனுமாகி
யதிகமு மாகி — அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி — அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி
யினிமையு மாகி — வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ
எனதுமு னோடி — வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூரும் — வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம — முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு — மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு — பெருமாளே



உ
சிவமயம்

## நன்றி நவிலல்

*19.03. 1995 இல் சிவ பதமடைந்த எமது குலவிளக்காகிய அருமைத் தந்தையின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றியும் பின்பு நடைபெற்ற அந்தியேட்டி வீட்டுக் கிரியை யாவற்றிலும் பங்கு கொண்டு தங்கள் அனுதாபங்களையும், உதவிகளையும் நல்கிய உளம் கனிந்த உள்ளங்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் ஆகியவற்றின் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் அளித்தோருக்கும் மற்றும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி மூலம் தங்கள் அன்பை அறியத் தந்தவர்களுக்கும் குறுகிய காலத்தில் இம்மலரைச் சிறந்த முறையில் தயாரித்து உதவிய யுனைற்றெட் மேர்ச்சன்ஸ் அச்சகத்தாருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

95, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு - 13.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

# வம்சாவளி

நாகநாதர் கந்தையா + வள்ளியம்மை — கார்த்திகேசு + அன்னப்பிள்ளை

மயில்வாகனம் + கனகம்மா

| முருகதாஸ் + சுமதி | பங்கயச்செல்வி + சிதம்பரநாதன் | செம்மனச்செல்வி + கிருஷ்ணபிள்ளை | பிறேமளச்செல்வி + இந்திரகுமார் |
|---|---|---|---|
| ஸ்ரீ கௌதமன்<br>கௌசிகன்<br>ஹரிணி<br>பிரகாஸ் | சகாநந்<br>கோபிந் | கிஸோகரன்<br>காயத்திரி | பிரசாந்<br>தாட்சாயினி<br>கோகுலன் |

Offset by
United Merchants Ltd.
Colombo - 13.